# அத்தியாயம் III

# வரவு செலவு திட்ட மேலாண்மை

# அத்தியாயம் III

# வரவு செலவு திட்ட மேலாண்மை

## 3.1 முன்னுரை

திறம்பட்ட நிதி மேலாண்மையானது, கொள்கை அளவில் எடுக்கப்பட்ட முடிவுகளை, நிதியை வீணாக்காமல் அல்லது திசைதிருப்பாமல் நிர்வாக அளவில் வெற்றிகரமாக செயல்படுத்தப்படுவதை உறுதி செய்வதாகும். இந்த அத்தியாயம் மாநிலத்தின் நிதியொதுக்க கணக்குகளின் தணிக்கையை அடிப்படையாகக் கொண்டது. இது அரசாங்கத்தின் ஒதுக்கீடு முன்னுரிமைகளை மதிப்பாய்வு செய்து, அரசியலமைப்பு சட்ட விதிகளில் இருந்து விலகல்கள் பற்றிய அறிக்கை அளிப்பது மற்றும் வெளிப்படைத் தன்மையைப் பாதிக்கும் பிரச்சினைகளை முன்னிலைப்படுத்தும்.

## 3.2 வரவு செலவு திட்ட நடைமுறை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 202வது பிரிவுக்கு இணங்க, ஒவ்வொரு நிதியாண்டிற்கும், அந்த ஆண்டிற்கான மாநிலத்தின் எதிர்நோக்கப்படும் வரவுகள் மற்றும் செலவினங்களின் அறிக்கை, "ஆண்டு நிதி நிலை அறிக்கை (பட்ஜெட்)" என்று அழைக்கப்படும். அறிக்கை மாநிலத்தின் சட்டமன்றம் முன் வைக்கப்பட வேண்டும். செலவினங்களின் மதிப்பீடுகள் 'சாட்டப்பட்ட' மற்றும் 'அனுமதிக்கப்பட்ட'[1] என்ற வகையில் தனித்தனியாகக் காட்டப்படுகின்றன, மேலும் வருவாய் வகை செலவினங்களை மற்ற செலவினங்களிலிருந்து வேறுபடுத்தி காட்டப்படுகின்றன. மாநில அரசால் எந்தவொரு செலவினத்தையும் மேற்கொள்வதற்கு முன்பு சட்டமன்ற அங்கீகாரம் அவசியம் தேவை.

தமிழ்நாடு வரவு செலவு திட்ட கையேட்டின்படி, வரவு செலவு திட்ட மதிப்பீடுகளைத் தயாரித்தல் மற்றும் ஆய்வு செய்தல் மற்றும் அதை அங்கீகரிக்கப்பட்ட மானியங்களுக்குள் வைத்திருப்பதை உறுதி செய்வதற்காக செலவினங்களைக் கட்டுப்படுத்துதல் ஆகியவற்றில் மதிப்பீட்டு அதிகாரிகள் மற்றும் தலைமைச் செயலகத்தின் துறைகளின் வழிகாட்டுதலுக்காக நிதித்துறை விதிகளை வகுக்கிறது. நிதித்துறை அரசின் முடிவுகளை உள்ளடக்கிய மதிப்பீடுகளை ஒருங்கிணைத்து பின்வருவனவற்றை தயாரிக்கிறது.

- (i) வரவு–செலவு திட்ட ஆண்டிற்கான நிதி நிலை குறித்த சுருக்க அறிக்கை
- (ii) வரவுகள் பற்றிய விரிவான மதிப்பீடுகள் மற்றும்

---

[1] **சாட்டப்படும் செலவினம்**: குறிப்பிட்ட நோக்கங்களுக்காக (உதாரணமாக அரசியல் சாசன அதிகாரிகளின் ஊதியம், கடன்களை திருப்பிச் செலுத்துதல் போன்றவை) மாநில சட்டமன்றத்தின் ஓட்டளிப்புக்கு உட்படாமல் மாநில தொகுநிதியால் சாட்டப்படும் செலவினம் சாட்டப்பட்ட செலவினம் ஆகும்.
**அனுமதித்த செலவினம்**: பிற செலவினங்கள் அனைத்தும் சட்டமன்ற ஓட்டளிப்புக்கு உட்பட்டவையாகும்.

(iii) **மானியங்களுக்கான கோரிக்கைகள் பற்றிய அறிக்கைகள் மற்றும் செலவினங்களின் விரிவான மதிப்பீடுகள்.**

**தொகு நிதியிலிருந்து செலவு செய்யப்படும் இந்த மதிப்பீடுகள் அனுமதிக்கப்பட்ட மற்றும் சாட்டப்பட்ட செலவினங்களை உள்ளடக்கியதாகும். வரவு செலவு திட்டம் தயாரிக்க மாநிலத்தில் வழக்கமாக பின்பற்றப்படும் செயல்முறை பின்வரும் விளக்கப்படத்தில் தரப்பட்டுள்ளன.**

**வரவு–செலவு திட்ட நடைமுறை**





CSS: மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள்; CS: மத்திய அரசு திட்டங்கள்; EAP: வெளிநாட்டு நிதியுதவி பெறும் திட்டங்கள்

**ஒவ்வொரு ஆண்டும் மாநில சட்டமன்றத்தில் நிதியமைச்சரால் ஆண்டு வரவு செலவு திட்டம் தாக்கல் செய்யப்படுகிறது.**

2022-23ல் **மாநில சட்டமன்றம் ஒப்புதல் அளித்த மூல மற்றும் துணை ஒதுக்கீடுகள், செலவு மற்றும் சேமிப்புகள் பற்றிய விவரங்கள் விளக்கப்படம் 3.1ல் கொடுக்கப்பட்டுள்ளன.**

விளக்கப்படம் 3.1: வரவு செலவு திட்டம் மற்றும் செலவின சுருக்கம்




## 3.3 மகளிருக்கான வரவு செலவு திட்டம்


மகளிருக்கான வரவு செலவு திட்ட அறிக்கை (Gender Budgeting Statement – GBS) (அறிக்கை 13) என்பது மகளிரை மையப்படுத்துவதற்கான ஒரு கருவியாகும். முழு கொள்கை செயல்முறைக்கும் மகளிரை பயன்படுத்தி தயாரிக்கும் வரவு செலவு திட்டம் ஒரு தொடக்க புள்ளியாக பயன்படுகிறது.

தமிழ்நாடு அரசு (GoTN) 2018-19ம் ஆண்டு முதல் வரவு செலவு திட்ட ஆவணத்தின் ஒரு பகுதியாக GBSஐ வழங்குகிறது. இருப்பினும், பாலின பகுப்பாய்வு செய்து வரவு செலவு திட்டத்தில் ஒன்றிணைப்பதற்காக முன்மொழியப்பட்ட மகளிருக்கான வரவு செலவு திட்ட பிரிவுகள் அனைத்து துறைகளிலும் உருவாக்கப்படவில்லை. நிதித்துறையில் உள்ள GBSஐ ஒருங்கிணைக்கும் பிரிவுடன், மூன்று துறைகள் (அதாவது. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலன் மற்றும் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை) மட்டுமே மகளிருக்கான வரவு செலவு திட்ட பிரிவை உருவாக்கின (செப்டம்பர் 2023).

தமிழக அரசால் அளிக்கப்படும் GBSல், மொத்த வரவு செலவு திட்டத்தில் மகளிருக்காக எதிர்நோக்கப்படும் ஒதுக்கீட்டை காட்டப்படும். அவை மகளிர்களுக்கு பயனளிக்கும் திட்டங்களுக்கு முன்மொழியப்பட்ட ஒதுக்கீடு விழுக்காட்டின் அடிப்படையில் மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளன. அதாவது பகுதி A (மகளிர்களை மட்டும் இலக்காக கொண்ட திட்டங்களில் 100 விழுக்காடு ஒதுக்கீடு), பகுதி B (மகளிரை மையப்படுத்தி செயல்படுத்தப்படும் திட்டங்களில் 40 விழுக்காடு முதல் 99 விழுக்காடு வரை பெண்களை இலக்காகக் கொண்ட திட்டங்கள்) மற்றும் பகுதி C (தமிழக அரசின் பிற மகளிர் பயன்பெறும் திட்டங்கள் மற்றும் செலவுகள் – இதில் குறைந்தபட்சம் ஒதுக்கீடு 30 விழுக்காடு).

### 3.3.1 2022-23ம் ஆண்டு GBSன் கண்ணோட்டம்

2018-19 முதல் 2022-23 வரையிலான ஐந்தாண்டு கால GBSன் ஒப்பீடு **விளக்கப்படம் 3.2**ல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.




மொத்த வரவு செலவு திட்ட ஒதுக்கீட்டில் மகளிருக்கான ஒதுக்கீடு 38.32 விழுக்காடு (2021-22) முதல் 39.47 விழுக்காடு வரை (2018-19) இருந்தது மற்றும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022-23ல் 0.65 விழுக்காடு புள்ளிகள் என சிறிதளவு உயர்ந்திருந்தது. மேலும், இந்த ஆண்டுகளில், பகுதி A, B மற்றும் C திட்டங்களின் ஒதுக்கீடு பரிந்துரைக்கப்பட்ட அளவிற்குள் இருந்தது.

### 3.3.2 2022-23ம் ஆண்டின் GBSன் பகுப்பாய்வு

2022-23ம் ஆண்டின் GBSல் உள்ள ஒவ்வொரு பகுதியின் திட்டங்கள் மற்றும் ஒதுக்கீடுகள் பற்றிய விவரங்கள் **அட்டவணை 3.1**ல் கீழே விவரிக்கப்பட்டுள்ளது:

**அட்டவணை 3.1: GBS 2022-23ன் பகுதி வாரியான விவரங்கள்**

**(₹ கோடியில்)**

| GBSன் பகுதிகள் | நிதி ஆண்டு 2022-23 | | | |
|---|---|---|---|---|
| | துறைகளின் எண்ணிக்கை | திட்டங்களின் எண்ணிக்கை | 2022-23ன் வரவு செலவு திட்ட ஒதுக்கீடு | GBS 2022-23ல் உள்ளடங்கிய தொகை |
| **பகுதி A** | 11 | 89 | 6,623.63 | 6,623.63 |
| **பகுதி B** | 13 | 298 | 73,103.67 | 38,571.74 |
| **பகுதி C** | -- | NA* | 1,57,384.33 | 47,215.28 |
| **மொத்தம்** | | **410** | **2,37,111.63** | **92,410.65** |

* 23 துறைகள் திட்டங்களை செயல்படுத்துகின்றன

(ஆதாரம்: GBS அறிக்கை - 2022-23)

பகுதி Aன் கீழ் ஒதுக்கப்பட்ட 11 துறைகளில், சமூக நலன் மற்றும் ஊட்டச்சத்து துறையில் அதிகபட்சமாக 84.75 விழுக்காடு ஒதுக்கீடு செய்யப்பட்டது மற்றும் 'மகளிருக்கான இலவச பேருந்து' திட்டத்திற்கு ஏற்படும் இழப்பை ஈடுகட்டுவதற்காக அதிகபட்சமாக ₹1,521.21 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. பகுதி Bல் உள்ள 13 துறைகளில் 'கல்வி, விளையாட்டு மற்றும் கலாச்சாரம்' துறைக்கு அதிகபட்ச ஒதுக்கீடாக 20.36 விழுக்காடும், மற்ற திட்டங்களில், பகுதி Bல் உள்ள 'பொது பொருளாதார சேவைகள்' துறையின் கீழ் 'சமூக பாதுகாப்பு வலை – உணவு பாதுகாப்பு – பொது விநியோக திட்ட ஆதரவு' என்ற திட்டதிற்கு அதிகபட்சமாக ₹3,750 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

2022-23க்கான GBSஐ பகுப்பாய்வு செய்ததில் பின்வருவன தெரியவந்தன.

- மத்திய அரசால் பரிந்துரைக்கப்பட்ட படிவமான அறிக்கை 13ன்படி GBS தயாரிக்கப்படவில்லை. இந்த அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டிருக்கும் 2020-21ன் உள்ளபடியான செலவு, கடந்த ஆண்டான 2021-22ன் வரவு செலவு திட்ட மதிப்பீடு மற்றும் திருத்திய மதிப்பீடு காட்டப்படவில்லை. இதன் விளைவாக, மகளிருக்காக செய்யப்பட்ட உள்ளபடியான செலவினம், மற்றும் GBSல் உள்ளடங்கியிருக்கும் திட்டங்களுக்கு துணைநிலை ஒதுக்கீட்டில் ஏதேனும் கடந்தாண்டுகளில் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை தணிக்கையால் உறுதி செய்யமுடியவில்லை.

- எல்லா துறைகளிலும், மகளிருக்கான வரவு செலவு திட்ட பிரிவுகள் உருவாக்கப்படாததால், கீழே குறிப்பிட்டுள்ளவாறு, எல்லா துறைகளிலுள்ள எல்லா திட்டங்களுக்கும் பாலின பகுப்பாய்வு செய்து முழுமையான GBS தயாரிக்கப்படவில்லை.

    - 4வது அகில இந்திய கைத்தறி கணக்கெடுப்பு 2019-20ன்படி, மகளிர் கைத்தறி வேலையாட்களின் எண்ணிக்கையில் தமிழ்நாடு 4வது இடத்தில் இருந்த போதிலும், GBSல் கைத்தறி மற்றும் ஜவுளித்துறையில் எந்த ஒரு நிதியும் மகளிருக்காக ஒதுக்கப்படவில்லை.

    - இதேபோல், மானிய எண் 45ன் கீழ் புதுமை பெண் திட்டம்/மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதி திட்டம், மானிய எண் 22ன் கீழ் 'பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்ற பிரிவு' மற்றும் மானிய எண் 42 ன் கீழ் 'மாநில புதுமை நிதியின் கீழ் உணவு பதப்படுத்தும் தொழில்நுட்பத்தில் சுய உதவி குழு பெண்களுக்கு பயிற்சி மற்றும் அடைகாக்கும் வசதி' திட்டம் ஆகியவை GBSல் உள்ளடக்கப்படவில்லை.

    - வருடாந்திர தொழிலாளர் கணக்கெடுப்பு அறிக்கை 2021-22ன்படி, வேளாண் மற்றும் அதனை சார்ந்த நடவடிக்கைகள் சார்ந்த துறையில் 62.9 விழுக்காடு பெண்கள் பெண்கள் இருந்த போதிலும், 2019-20ல் இருந்து 2022-23

வரை 7.03 விழுக்காடாக இருந்த 'வேளாண் மற்றும் அதனை சார்ந்த நடவடிக்கைகள்'ஆன ஒதுக்கீடு 0.96 விழுக்காடாக கணிசமாக குறைந்தது.

### 3.3.3 பகுதி A திட்டத்தின் கீழுள்ள ஒதுக்கீடுகளை திரும்ப பெற்றமை

2022-23 GBSல் உள்ளடக்கப்பட்ட ஐந்து பகுதி A திட்டங்களுக்கான வரவு செலவு திட்ட ஒதுக்கீடு முழுவதும் திரும்ப பெறப்பட்டதன் விளைவாக, அந்தந்த கணக்கு தலைப்பின் கீழ் செலவினம் ஏதும் செய்யவில்லை. இந்த திட்டங்களில், நிர்பயா நிதி (மானிய எண் 34) மற்றும் மகிளா சக்தி கேந்திரா திட்டம் ஆகிய இரண்டு திட்டங்களுக்கு வரவு செலவு திட்டத்தில் முறையே ₹71.37 கோடி மற்றும் ₹9.38 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இந்தியாவிலுள்ள எட்டு மாநகரங்களில் செயல்படுத்தப்படும் நிர்பயா நிதி திட்டம் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டம் ஆகும். இதன் நோக்கம், பொது இடங்களில் பாதுகாப்பான மற்றும் அதிகாரம் அளிக்கும் வகையில் சூழ்நிலைகளை உருவாக்குவது மற்றும் பாலினத்தை அடிப்படையாக கொண்ட வன்முறை மற்றும்/அல்லது துன்புறுத்தல்கள் போன்ற அச்சுறுத்தல்கள் இல்லாமல் எல்லா வாய்ப்புகளையும் தொடர முடியும் என்ற நிலையை உருவாக்குதல் ஆகும். சமூக பங்கேற்பு மூலம் கிராம புற மகளிருக்கு அதிகாரம் அளிப்பதை நோக்கமாக கொண்டது மற்றும் மகளிருக்கான திட்டங்கள் மற்றும் திட்டங்களின் துறைகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பை எளிதாக்குகிறது. இரண்டு திட்டங்களுக்கும் மத்திய அரசு மற்றும் தமிழக அரசு 60:40 விகிதத்தில் நிதி அளிக்கின்றன. நிதி இருந்தும் இந்த திட்டங்களிலிருந்து செலவு ஏதும் செய்யாமல் வரவு செலவு திட்ட ஒதுக்கீட்டை திரும்ப பெற்றமை என்பது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இந்த திட்டங்களின் வறிதான செயலாக்கத்தை குறிக்கிறது.

### 3.3.4 பிற தணிக்கை குறிப்புரைகள்

பகுதி Aன் கீழுள்ள 100 விழுக்காடு மகளிர் சார்ந்த திட்டங்களில், **அட்டவணை 3.2**ல் கூறப்பட்டுள்ளவாறு, ஒதுக்கீடு செய்யப்பட்டதைவிட குறைவாக பயன்படுத்தப்பட்டது.

**அட்டவணை 3.2: பகுதி Aன் கீழுள்ள திட்டங்கள் – இதில் வரவு செலவு ஒதுக்கீடு குறைவாக பயன்படுத்தப்பட்டமை**

(₹ கோடியில்)

| வ. எண் | திட்டம் | வரவு செலவு திட்ட ஒதுக்கீடு | உள்ள படியான செலவினம் | பயன்பாட்டின் விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | பூப்பெய்திய மகளிருக்கான சுகாதார நல்வாழ்வு திட்டம் | 115.01 | 79.66 | *69.26* |
| 2 | திருமண உதவி திட்டம் | 761.99 | 91.86 | *12.06* |
| 3 | வறுமை கோட்டிற்கு கீழுள்ள குடும்பத்தில் உள்ள மகளிருக்கு பிரசவத்திற்கான டாக்டர் | 816.98 | 691.20 | *84.60* |

| வ. எண் | திட்டம் | வரவு செலவு திட்ட ஒதுக்கீடு | உள்ள படியான செலவினம் | பயன்பாட்டின் விழுக்காடு |
|---|---|---|---|---|
| | முத்துலெட்சுமி மகப்பேறு உதவி திட்டம் | | | |
| 4 | ஆதரவற்ற விதவைகளுக்கான இந்திராகாந்தி தேசிய ஓய்வூதிய திட்டம் | 867.66 | 604.20 | *69.64* |
| 5 | சமூக பாதுகாப்பு திட்டம் – கைவிடப்பட்ட மனைவிகளுக்கான ஓய்வூதியம் | 174.83 | 143.80 | *82.25* |
| 6 | தன்னாட்சி கல்லூரிகள் (மகளிர்) | 2.17 | 1.31 | *60.37* |
| 7 | மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான அரசு மருத்துவமனை, சென்னை | 44.93 | 38.42 | *85.51* |
| 8 | அன்னை தெரசா பெண்கள் பல்கலைக்கழகம், கொடைக்கானல் | 16.50 | 12.60 | *76.36* |
| 9 | குடும்ப கட்டுப்பாட்டுக்கான இழப்பீடு | 16.66 | 12.90 | *77.43* |
| 10 | முஸ்லீம் பெண்கள் சங்கம் | 4.13 | 2.49 | *60.29* |
| 11 | வயது முதிர்ந்த திருமணம் ஆகாத ஏழைகளுக்கான ஓய்வூதியம் | 36.61 | 31.00 | *84.68* |

*(ஆதாரம்: GBS அறிக்கை மற்றும் நிதியொதுக்க கணக்குகள் 2022-23)*

பூப்பெய்திய மகளிருக்கான சுகாதார நல்வாழ்வு திட்டத்தில், 2022-23ல் வரவு செலவு திட்ட ஒதுக்கீட்டில் 69.26 விழுக்காடு மட்டுமே பயன்படுத்தப்பட்டது. கடந்த ஆண்டுகளில் செலவு செய்யப்படாத தொகையான ₹147.65 கோடி 2022-23ல் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இது, இந்த திட்டங்களுக்கான ஒதுக்கீடு தொடர்ந்து குறைவாக பயன்படுத்தப்பட்டதை குறிக்கிறது.

இதை சுட்டிக்காட்டிய போது, கோவிட் 19 காரணமாக, மூலப்பொருட்கள் மற்றும் போக்குவரத்து கிடைக்கப் பெறாததால், முறையாக நாப்கினை விநியோகிக்க முடியவில்லை என பொது சுகாதாரம் – தடுப்பு மருந்து இயக்குநர் தெரிவித்தார் (நவம்பர் 2023). கோவிட் 19 கட்டுப்பாடுகள் 2022-23ல் தளர்த்தப்பட்டுவிட்டதால் இப்பதில் ஏற்கத்தக்கதல்ல.

மேலும், பகுதி Aல் உள்ள 12 திட்டங்களுக்கு, வரவு செலவு ஒதுக்கீட்டில் அடையாள ஒதுக்கீடு செய்யப்பட்டு, பின்னர் அவை திரும்ப பெறப்பட்டன. இந்த 12 திட்டங்களை தவிர்த்து, பகுதி Aல் உள்ள நிகர திட்டங்களின் எண்ணிக்கை 89க்கு பதிலாக 77 ஆகும். அதனுடைய விவரங்கள் **இணைப்பு 3.1**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

கிடைக்கக்கூடிய வளஆதாரங்களை அடிப்படையாக கொண்டு பெண்களின் வளர்ச்சி தேவையை அறிந்து கொள்கைகள்/திட்டங்களை நெறிப்படுத்தும் பணிகளை மேற்கொள்ளும் மகளிர் வரவு செலவு திட்ட குழு எல்லா துறைகளிலும் உருவாக்கப்படாததன் விளைவாக வரவு செலவு திட்ட

ஒதுக்கீடு குறைவாக பயன்படுத்தப்பட்டது மற்றும் முறையான வரவு திட்ட நடைமுறை இல்லை என்பதை தணிக்கை கண்டறிந்தது.

## 3.4 நிதியொதுக்க கணக்குகள்

ஒவ்வொரு நிதி ஆண்டிலும், நிதியொதுக்கீட்டு சட்டத்தில் இணைக்கப்பட்டுள்ள அட்டவணைகளில் குறிப்பிட்டுள்ள பல்வேறு பணிகளுக்கான அனுமதிக்கப்பட்ட மானியங்கள்[2] மற்றும் சாட்டிய நிதியொதுக்கங்களுக்கு[3] எதிராக அரசு செய்த செலவிற்கான கணக்குகள் நிதியொதுக்க கணக்குகள் எனப்படும். இக்கணக்குகள், வரவு – செலவு திட்ட நிலையிலான மூல ஒதுக்கீடுகள், துணை ஒதுக்கீடுகள், நிதி ஒப்படைப்புகள் மற்றும் மறுநிதியொதுக்கங்கள் ஆகியவற்றை காட்டுவதுடன், வரவு – செலவு திட்டத்தில் அனுமதித்தது மற்றும் சாட்டியது என்ற இரு இனங்கள் தொடர்பாகவும் நிதியொதுக்கீட்டு சட்டம் அனுமதித்த தொகைகளுக்கெதிராக பல்வேறு பணிகளுக்காக செய்யப்பட்ட உள்ளபடியான வருவாய் மற்றும் மூலதன வகை செலவுகளையும் காட்டுகின்றன. இவ்வகையில், நிதியொதுக்க கணக்குகள் நிதி பயன்பாடு பற்றி புரிந்துகொள்ள உதவி செய்து, நிதிக்கணக்குகளுக்கு இணை ஆவணங்களாக திகழ்கின்றன.

### 3.4.1 2022-23ல் மொத்த ஒதுக்கீடு, உள்ளபடியான செலவுகள் மற்றும் சேமிப்பு / மிகையின் சுருக்கம்

2022-23 ஆண்டிற்கான 54 மானியங்கள் / இரண்டு நிதியொதுக்கங்களுக்கான மொத்த ஒதுக்கீடு, செலவு மற்றும் சேமிப்பு/மிகையின் சுருக்கம், அனுமதிக்கப்பட்ட/சாட்டிய வகைகளுக்கான பிரிவு விவரங்களுடன் **அட்டவணை 3.3**ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 3.3: 2022-23ல் அரசால் இயக்கப்பட்ட மானியங்கள்/நிதியொதுக்கங்களின் எண்ணிக்கை**

**(₹ கோடியில்)**

| வரிசை எண் | விவரம் | மானியம்/ நிதியொதுக்கங்–களின் மொத்த எண்ணிக்கை | அனுமதிக்கப் பட்ட/ சாட்டிய செலவினத்திற்கான வகை | வருவாய் | மூலதனம் | வரவு செலவு திட்ட ஒதுக்கீடு | செலவு |
|---|---|---|---|---|---|---|---|
| A | மானியங்கள் | 54 | அனுமதிக்கப்பட்டது/ சாட்டியது | 54 | 47 | 3,16,485.72 | 2,84,514.73 |
| B | நிதியொதுக்கங்கள் | 2 | சாட்டியது | 1 | 1 | 77,770.00 | 74,651.61 |
| **மொத்தம் (A+B)** | | | | | | **3,94,255.72** | **3,59,166.33** |

*(ஆதாரம்: நிதியொதுக்க கணக்குகள் 2022-23)*

[2] குறிப்பிட்ட நோக்கங்களுக்கான மானிய கோரிக்கைகளுக்கு சட்டமன்றம் ஒப்புதல் அளித்த தொகைகள்

[3] மாநில சட்டமன்றத்தில் –ஓட்டளிப்புக்கு உட்படாமல் மாநில தொகுநிதியில் நேரடியாக சாட்டப்படும் செலவுகள்

### 3.4.2 அனுமதிக்கப்பட்ட/சாட்டிய செலவினங்கள்

2018-19 முதல் 2022-23ம் ஆண்டு வரையிலான ஐந்து வருட காலகட்டத்திற்கான சாட்டிய மற்றும் அனுமதிக்கப்பட்ட மொத்த செலவினம் மற்றும் சேமிப்பு/மிகை பற்றிய விவரங்கள் **அட்டவணை 3.4**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.4: சேமிப்பு/மிகையின் போக்குகள்**

(₹ *கோடியில்*)

| ஆண்டு | ஒதுக்கீடுகள் | | | செலவுகள் | | | நிகர சேமிப்பு (–) | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | அனுமதிக்கப் பட்டது | சாட்டியது | மொத்தம் | அனுமதிக்கப் பட்டது | சாட்டியது | மொத்தம் | அனுமதிக்க ப்பட்டது | சாட்டியது |
| 2018-19 | 2,21,168 | 46,825 | 2,67,993 | 2,03,324 (92) | 44,846 (96) | 2,48,170 (92.60) | (-) 17,844 (8) | (-) 1,980 (4) |
| 2019-20 | 2,36,358 | 51,995 | 2,88,353 | 2,10,349 (89) | 50,910 (98) | 2,61,259 (90.60) | (-) 26,009 (11) | (-) 1,084 (2) |
| 2020-21 | 2,82,839 | 56,133 | 3,38,972 | 2,40,033 (85) | 53,720 (96) | 2,93,753 (86.66) | (-) 42,806 (15) | (-) 2,413 (4) |
| 2021-22 | 2,84,539 | 65,201 | 3,49,740 | 2,56,920 (90) | 62,442 (96) | 3,19,362 (91.31) | (-) 27,619 (10) | (-) 2,759 (4) |
| 2022-23 | 3,15,645 | 78,611 | 3,94,256 | 2,83,715 (90) | 75,451 (96) | 3,59,166 (91.10) | (-) 31,930 (10) | (-) 3,160 (4) |

அடைப்புக் குறிக்குள் உள்ள இலக்கங்கள் பயன்பாட்டின் விழுக்காட்டை குறிக்கும்
(ஆதாரம்: அந்தந்த ஆண்டுக்கான நிதியொதுக்க கணக்குகள்)

கடந்த ஐந்தாண்டுகளில் வரவு செலவு திட்ட ஒதுக்கீட்டில் 86.66 முதல் 92.60 விழுக்காடு வரை அரசு செலவு செய்தது. நடப்பாண்டு மற்றும் முந்தைய ஆண்டுகளில், வரவு செலவு திட்ட ஒதுக்கீட்டில் அனுமதிக்கப்பட்ட மானியத்தில் 90 விழுக்காடும், சாட்டிய நிதியொதுக்கத்தில் 96 விழுக்காடும் பயன்படுத்தப்பட்டன.

### 3.4.3 வரவு செலவு திட்டத்தின் துல்லியதன்மை

உள்ளபடியான வருவாய் மற்றும் செலவினத்திற்கும் மற்றும் வரவு செலவு திட்டத்தில் எதிர்நோக்கப்பட்ட வருவாய் மற்றும் செலவினத்திற்கும் உள்ள வேறுபாட்டை ஆய்வு செய்வதே வரவு செலவு திட்டத்தின் துல்லியத்தன்மையாகும். மொத்த செலவின வெளிப்பாடு மற்றும் செலவின உள்ளடக்கங்களின் கூறுகள் அடிப்படையில் வரவு செலவு திட்டத்தின் நம்பகத்தன்மையை உலக வங்கியின் பொது செலவினம் மற்றும் நிதி பொறுப்புடைமை அளவிடுகிறது.

#### *3.4.3.1 மொத்த செலவினத்தின் வெளிப்பாடு*

மொத்த வரவு செலவு திட்ட வெளிப்பாடு/உள்ளபடியான செலவினத்தை முதலாவதாக ஒப்புதலளிக்கப்பட்ட வரவு செலவு திட்டத்துடன் ஒப்பிட்டு மொத்த செலவினத்தின் வெளிப்பாடு மதிப்பிடப்படுகிறது. இது நிதி துல்லியத்தன்மையை அல்லது நடப்பாண்டில் எதிர்நோக்கப்பட்ட வருவாய் மற்றும் செலவினத்தின் துல்லியதன்மையை பிரதிபலிக்கும்.

**அட்டவணை 3.5: மூல வரவு செலவு திட்டம் மற்றும் செலவுகளிக்கிடையேயான ஒப்பீடு**

**(₹ கோடியில்)**

| பிரிவு | மூல ஒதுக்கீடு | உள்ள படியான செலவு | மூல ஒதுக்கீட்டிற்கும் உள்ளபடியான செலவிற்கும் உள்ள வேறுபாடு* | மூல ஒதுக்கீட்டிற்கும் உள்ளபடியான செலவிற்கும் உள்ள வேறுபாட்டின் விழுக்காடு |
|---|---|---|---|---|
| **வருவாய்** | 2,87,886.95 | 2,85,028.80 | (-) 2,858.15 | *(-) 0.99* |
| **மூலதனம்** | 43,072.81 | 39,772.32 | (-) 3,300.48 | *(-) 7.66* |

* உள்ளபடியான செலவு மூல ஒதுக்கீட்டை விட அதிகமாக இருந்தால், இலக்கங்கள் (+)ல் குறிக்கப்படும். உள்ளபடியான செலவு மூல ஒதுக்கீட்டை விட குறைவாக இருந்தால், இலக்கங்கள் (–)ல் குறிக்கப்படும்.

*(ஆதாரம்: நிதியொதுக்க கணக்குகள் 2022-23)*

வருவாய் பிரிவில், மூல ஒதுக்கீட்டிற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் உள்ள ஒட்டுமொத்த வேறுபாடு 0.99 விழுக்காடாகும். இந்த வேறுபாட்டுக்கு, 41 மானியங்களில் 25 விழுக்காடு வரையும், எட்டு மானியத்தில் 25 விழுக்காட்டு மேல் 50 விழுக்காடு வரையும் மற்றும் ஆறு மானியங்களில் 50 விழுக்காட்டுக்கு மேல் 100 விழுக்காடு வரையும் உள்ள வேறுபாடுகள் முக்கிய காரணமாகும்.

மூலதன பிரிவில், மூல ஒதுக்கீட்டிற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் உள்ள ஒட்டுமொத்த வேறுபாடு 7.66 விழுக்காடாகும். இந்த வேறுபாட்டுக்கு, 13 மானியங்களில் 25 விழுக்காடு வரையும், ஒன்பது மானியத்தில் 25 விழுக்காட்டு மேல் 50 விழுக்காடு வரையும், ஆறு மானியங்களில் 50 விழுக்காட்டுக்கு மேல் 100 விழுக்காடு வரையும் மற்றும் 15 மானியத்தில் 100 விழுக்காடு அல்லது அதற்கு மேலும் உள்ள வேறுபாடுகள் முக்கிய காரணமாகும்.

## 3.5 நிதியொதுக்கம் மீதான தணிக்கை

நிதியொதுக்கங்கள் மீதான இந்திய தணிக்கை தலைவரின் தணிக்கை, பல்வேறு மானியங்களின் கீழ் உள்ளபடியே செய்யப்பட்ட செலவு நிதியொதுக்க சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அனுமதியை ஒட்டி உள்ளதா மற்றும் அரசியலமைப்பு சட்டத்தின் (பிரிவு 202) வழிவகைகளின் கீழ் சாட்டப்பட வேண்டிய செலவு அவ்வாறே சாட்டப்பட்டதா என்பவற்றை அறிய விழைகிறது. செய்யப்பட்ட செலவானது, சட்டங்கள் தொடர்புடைய விதிகள், ஒழுங்குமுறைகள் மற்றும் அறிவுறுத்தல்களுடன் ஒத்திருக்கிறதா என்பதை அறியவும் அது விழைகிறது.

### 3.5.1 வரவு செலவு திட்டம் மற்றும் கணக்கு வைப்பு முறையின் நம்பகத்தன்மை மீதான காண்புரைகள்

#### *3.5.1.1 சட்டபடியான அதிகாரமில்லாமல் செய்யப்பட்ட செலவு*

இந்திய அரசியலமைப்பு பிரிவு 266(3)ன்படி, இந்திய அரசியலமைப்பு சட்டம், பிரிவு 204 மற்றும் 205 வழிவகைகளுக்கு இணங்க நிறைவேற்றப்பட்ட சட்டத்தின்படியான நிதியொதுக்கம் தவிர்த்து வேறு எந்த வழிவகையிலும்

மாநில தொகுநிதியிலிருந்து பணம் எடுக்கப்படக்கூடாது. ஆயினும் **அட்டவணை 3.6**ல் கூறப்பட்டுள்ளவாறு, எட்டு நேர்வுகளில், மூல மற்றும் துணை ஒதுக்கீடு இல்லாமல். மறு நிதியொதுக்கம் மூலம், ₹40.09 இலட்சம் செலவு செய்யப்பட்டது கண்டறியப்பட்டது. பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகளை பின்பற்ற தவறியதால், சட்டமன்றத்தின் ஒப்புதல் இல்லாமல் திட்டங்களுக்காக செலவு செய்யப்பட்டது.

**அட்டவணை 3.6: தவறான மறுநிதியொதுக்கத்தை அடிப்படையாக கொண்டு செய்யப்பட்ட செலவினம்**

(₹ *இலட்சத்தில்*)

| வரிசை எண் | மானிய எண் | கணக்கு தலைப்பு | மூல மற்றும் துணை ஒதுக்கீடுகளில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | மறுநிதியொதுக்கம் மூலம் செய்யப்பட்ட ஒதுக்கீடு | உள்ளபடியான செலவு |
|---|---|---|---|---|---|
| 1 | 05 | 2401.00.104.AD | 0 | 1.10 | 1.10 |
| 2 | 05 | 2401.00.107.JA | 0 | 0.76 | 0.76 |
| 3 | 19 | 2210.01.001.AS | 0 | 4.81 | 4.81 |
| 4 | 29 | 3452.01.101.PA | 0 | 1.65 | 1.65 |
| 5 | 39 | 4210.02.103.JA | 0 | 17.48 | 17.48 |
| 6 | 43 | 4202.01.202.JH | 0 | 2.90 | 2.90 |
| 7 | 44 | 2851.00.102.MC | 0 | 3.37 | 3.37 |
| 8 | 45 | 2235.02.103.UO | 0 | 8.02 | 8.02 |
| **மொத்தம்** | | | **0** | **40.09** | **40.09** |

(*ஆதாரம்: நிதியொதுக்க கணக்குகள்* 2022-23)

மூல மற்றும் துணை ஒதுக்கீடுகளில் எந்த ஒரு ஒதுக்கீடும் இல்லாமல் கணக்குத் தலைப்புகளில் நிதிகளை மறுநிதியொதுக்கம் செய்வது என்பது வரவு செலவு திட்ட நடைமுறைகளில் உள்ள குறைபாடுகளை குறிக்கிறது என தணிக்கை கண்டறிந்தது. மேலும், சட்டமன்ற ஒப்புதலளில்லாமல் செலவு செய்வது என்பது அரசியலமைப்புக்கு எதிரானது.

### *3.5.1.2 வரவு – செலவு திட்ட மானியம் காலாவதியாகாமல் இருக்க நிதியை எடுத்தமை*

தமிழ்நாடு வரவு செலவு திட்ட கையேடு, பத்தி 178ன்படி, அரசு கணக்கிலிருந்து உடனடி தேவை இல்லாமல் பணம் எடுப்பது என்பது முறையற்றது ஆகும். மேலும், நிதிக் குறியீடு தொகுதி – Iன் பிரிவு 39ன் படி, நிதியாண்டின் முடிவில் அனைத்து ஒதுக்கீடுகளும் காலாவதியாகிவிடும். அதனை தவிர்க்க, கருவூலத்திலிருந்து பணம் எடுத்து அடுத்த ஆண்டில் செலவினங்களுக்காக பயன்படுத்த கூடாது.

நடப்பாண்டில், **அட்டவணை 3.7**ல் பட்டியலிடப்பட்டுள்ள கணக்கு தலைப்பின் கீழ் நிதியொதுக்க கணக்கின் கீழ் செலவினம் காட்டப்பட்டு, பணம் எடுத்து வழங்கும் அதிகாரிகளின் (DDO) வங்கி கணக்கிற்கு நிதி மாற்றப்பட்டுள்ளது கண்டறியப்பட்டது. இந்நிதி செலவழிக்காமல் (₹4.59 கோடி) DDOக்களின் வங்கி கணக்கில் இருந்தது. இது வழிமுறைகளை மீறிய செயலாகும் மற்றும் வருவாய் வகை செலவினமான மேற்கூறப்பட்ட

அளவிற்கு அதிகப்படுத்தப்பட்டு காட்டப்பட்டது. இது நிதியாண்டின் முடிவில் பணம் காலாவதியாகாமல் இருக்க தேவையில்லாமல் எடுக்கப்பட்டதை சுட்டிக்காட்டுகிறது.

**அட்டவணை 3.7: 31 மார்ச் 2023 அன்றுள்ளவாறு செலவழிக்கப்படாமல் வங்கி கணக்கில் இருந்த நிதிகள் பற்றிய விவரம்**

(₹ இலட்சத்தில)

| வரிசை எண் | DDOன் பெயர் | மானிய எண் | கணக்குத் தலைப்பு | 2022-23ல் மாற்றம் செய்யப்பட்ட தொகை | 2022-23ல் உள்ளபடியே செய்த செலவினம் | 31 மார்ச் 2023ல் செலவழிக்கப் படாமல் வங்கியில் இருந்த நிதி |
|---|---|---|---|---|---|---|
| 1 | தொழில்நுட்ப கல்வி இயக்குநகரம் (அறிவியல் நகரம்) | 20 | 3425.60.200.JQ | 165.40 | 158 | 7.40 |
| 2 | தொழில்நுட்ப கல்வி இயக்குநகரம் (தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையம்) | 20 | 3425.60.200.AF | 381.99 | 306.86 | 75.13 |
| 3 | ஊரக மற்றும் நகர்ப்புற திட்டமிடல் இயக்குநரகம் | 26 | 2217.05.191.SC | 346.38 | 83.1 | 263.28 |
| | | | 2217.05.800.PD | 222.57 | 132.57 | 90 |
| 4 | சென்னை ஒருங்கிணைந்த மாநகர போக்குவரத்து ஆணையம் | 26 | 3055.00.800.AN | 808 | 784.84 | 23.16 |
| **மொத்தம்** | | | | **1,924.34** | **1,465.37** | **458.97** |

(*ஆதாரம்: நிதியொதுக்க கணக்குகள்* 2022-23)

### *3.5.1.3 செலவை தவறாக வகைப்படுத்துதல்*

செலவு மற்றும் வரவுகளை தவறாக வகைப்படுத்துவது நிதிநிலை அறிக்கைகளின் நம்பகத்தன்மை மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். ஆண்டு நிதிநிலை அறிக்கை வருவாய் வகை செலவை, பிற செலவுகளிலிருந்து வேறுபடுத்தி காட்டுகிறது. வருவாய் வகை செலவை மூலதன வகை செலவாகவோ அல்லது மூலதன வகை செலவை வருவாய் வகை செலவாகவோ வகைப்படுத்துவதன் விளைவாக வருவாய் வகை செலவு மற்றும் வருவாய் வகை பற்றாக்குறை/மிகையின் அளவை கூடுதலாக/குறைத்து காட்டப்படும்.

*செலவை தவறாக கணக்கு வைத்தல்*

மூலதன சொத்துக்களை பெறுவதற்கும், பிற மூலதன வகை செலவிற்கும் நிதியொதுக்கம் பெறுவதற்கும் குறிப்பான குறுந்தலைப்புகள் (object head) உள்ளன.

நடப்பாண்டில், 'மாநில உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி'க்கு மாற்றம் செய்யப்பட்ட ₹5.74 கோடி அளவிலான மூலதன வகை செலவு, மூலதன செலவு கணக்கான பெருந்தலைப்பு 5054ல் கீழ் பதிவு வைக்கப்படாமல், வருவாய் வகை செலவாக 'சேமநிதியிலிருந்து செய்யப்பட்ட செலவு' என்ற தலைப்பின் கீழ் தவறுதலாக பெருந்தலைப்பு 2217ல் கணக்கு


வைக்கப்பட்டது. இந்த தவறான வகைப்படுத்துதலால் வருவாய் வகை செலவானது மேற்படி தொகை அளவிற்கு அதிகமாக காட்டப்பட்டது.

### *3.5.1.4 தேவையற்ற அல்லது மிகையான துணை மானியம்*

2022-23ம் ஆண்டில் மூல ஒதுக்கீடு ₹3,64,107.02 கோடி மற்றும் துணை ஒதுக்கீடு ₹30,148.70 கோடி என்பவற்றுக்கெதிராக, ₹3,59,166.33 கோடி மட்டுமே செலவு செய்யப்பட்டு, ₹35,089.39 கோடி நிகர சேமிப்பு ஏற்பட்டது.

துணை ஒதுக்கீடுகளை சோதனை சரிபார்ப்பு செய்ததில், தேவையற்ற/ கூடுதலான/போதுமானதாக இல்லாத ஒதுக்கீடுகளின் நேர்வுகள் தெரியவந்தன (**இணைப்பு 3.2(அ), இணைப்பு 3.2(ஆ) மற்றும் இணைப்பு 3.3**). இவை விவரமாக **விளக்கப்படம் 3.3**ல் காட்டப்பட்டுள்ளன.

**விளக்கப்படம் 3.3: தேவையற்ற/ கூடுதலான/போதுமானதாக இல்லாத துணை ஒதுக்கீடுகள்**




செலவினம் மூல ஒதுக்கீட்டிற்குள் இருந்த போதிலும், துணை ஒதுக்கீடுகள் தேவையில்லாமல் கொடுக்கப்பட்டிருப்பது மேலே கூறப்பட்டவைகளிலிருந்து தெரிய வந்தது. மேலும், சில கணக்குத் தலைப்புகளில், மூல மற்றும் துணை ஒதுக்கீடுகள் போதுமானதாக இல்லாமல் கூடுதல் செலவுகளுக்கு வழிவகுத்தது.

### *3.5.1.5 தேவையற்ற/ மிகையான/ போதுமானதாக இல்லாத மறுநிதியொதுக்கங்கள்*

துணை மானியத்தை தவிர, ஒரு மானியத்திற்குள்ளே நிதியை மறுஒதுக்கம் செய்ய மறுநிதியொதுக்கத்தை பயன்படுத்த முடியும். ஒரு மானியத்தினுள் அல்லது சாட்டப்பட்ட நிதியொதுக்கத்திற்குள், சேமிப்புபை எதிர்நோக்கப்படும் ஒரு அலகிற்கான ஒதுக்கீட்டிலிருந்து கூடுதல் நிதி தேவைப்படும். மற்றொரு அலகிற்கு, ஒரே பிரிவின் கீழ், (வருவாய்–அனுமதிக்கப்பட்டது, வருவாய்–சாட்டப்பட்டது, மூலதனம்–அனுமதிக்கப்பட்டது, மூலதனம்–

சாட்டப்பட்டது) நிதியை தகுதியுடைய அதிகார அமைப்பு மூலம் மாற்றுவது மறுநிதியொதுக்கம் ஆகும்.

எனினும், ஒரு துணை தலைப்பிலிருந்து மற்றொன்றிற்கு கணிசமான அளவில் மறுநிதியொதுக்கம் செய்வது தவிர்க்கப்பட வேண்டும். செய்ய விடுபட்டமை மற்றும் தொலைநோக்கு பார்வையின்மையை சரிசெய்வதற்காக மட்டுமே மறுநிதியொதுக்கம் செய்யும் முறையை பயன்படுத்துவது என்பது கூடாது.

**அட்டவணை 3.8**ல் விளக்கப்பட்டுள்ளவாறு, வரவு–செலவு திட்ட ஒதுக்கீட்டில் இருந்த துல்லியமின்மையை சுட்டிக்காட்டுவது மட்டுமல்லாமல், நிதி தேவையுள்ள பிற துறைகளுக்கு நிதி கிடைக்க விடாமல் செய்யும் வகையில், போதுமானதாக இல்லாத/தேவையற்ற/ மிகையான மறுநிதியொதுக்கம் இருந்ததை தணிக்கை கூர்ந்தாய்வில் தெரியவந்தது.

**அட்டவணை 3.8: 2022-23ல் ஆராயாது செய்யப்பட்ட மறுநிதியொதுக்கங்கள்**

| வரிசை எண் | விவரம் | கணக்குத் தலைப்புகளின் எண்ணிக்கை | மூல ஒதுக்கீடு (O) | துணை ஒதுக்கீடு (S) | மறுநிதி யொதுக்கம் (R) | இறுதி திருத்திய மானியம் (O+S+R) | தொகை | பார்வை – இணைப்பு எண். |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | (₹ கோடியில்) | |
| I | மிகையான/ போதுமானதாக இல்லாத மறுநிதியொதுக்கங்கள் | | | | | | | |
| 1 | ₹2 கோடிக்கும் மேலுள்ள சேமிப்புகள் | 50 | 42,357.27 | 584.73 | (-) 14,49.37 | 41,492.63 | 2,014.74 | **3.4** |
| 2 | ₹2 கோடிக்கும் மேலுள்ள கூடுதல்கள் | 25 | 31,503.01 | 0 | 4,797.02 | 36,300.04 | 427.04 | **3.4** |
| II | தேவையற்ற மறுநிதியொதுக்கங்கள் | | | | | | | |
| 3 | செலவு ஏதுவுமில்லாமல் அல்லது மூல மற்றும் துணை ஒதுக்கீட்டிற்குள் செலவு இருந்து, மறுநிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படுவது | 17 | 154.56 | 6.17 | 11.06 | 171.78 | 11.06 | **3.5** |
| III | ஆராயாது செய்யப்பட்ட மறுநிதியொதுக்கங்கள் | | | | | | | |
| 4 | ₹ 100 கோடிக்கும் மேலான ஒதுக்கீடுகள் முழுவதும் மறுநிதியொதுக்கம் மூலம் திரும்ப பெறப்பட்டமை | 24 | 12,461.23 | 0 | (-) 12,461.23 | 0 | 12,461.23 | **3.6** |
| 5 | பெருந்தலைப்பு 8342ன் கீழ் வைப்புத் தொகைகள் மீதான | 9 | 29.09 | 0 | (-) 29.09 | 0 | 29.09 | **3.7** |

| வரிசை எண் | விவரம் | கணக்குத் தலைப்புகளின் எண்ணிக்கை | மூல ஒதுக்கீடு (O) | துணை ஒதுக்கீடு (S) | மறுநிதி யொதுக்கம் (R) | இறுதி திருத்திய மானியம் (O+S+R) | தொகை | பார்வை – இணைப்பு எண். |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | (₹ கோடியில்) | |
| | வட்டி பொறுப்புகள் மீதான ஒதுக்கீடுகள் முழுவதும் திரும்ப பெறப்பட்டமை | | | | | | | |
| 6 | இறுதி திருத்திய மானியம் இல்லாமல் செய்த செலவு | 14 | 1,718.41 | 0.00* | (-) 1,718.41 | 0 | 141.98 | 3.8 |

*அடையாள ஒதுக்கீடு ₹10,000

(*ஆதாரம்: விரிவான நிதியொதுக்க கணக்குகள் 2022-23*)

**அட்டவணை 3.9**ல் கூறப்பட்டுள்ளவாறு, ஆறு கணக்குத் தலைப்புகளின் கீழ், துணை ஒதுக்கீடுகளில் அடையாள ஒதுக்கீடு மட்டும் செய்யப்பட்டது. முதலாவது மறுநிதியொதுக்கத்தில் கூடுதல் ஒதுக்கீடாக ₹107.08 கோடி கொடுக்கப்பட்டு, கொடுக்கப்பட்ட ஒதுக்கீடுகள் முழுவதும் இரண்டாவது மறுநிதியொதுக்கத்தில் திரும்பப் பெறப்பட்டன. ஆயினும், இந்த தலைப்புகளின் கீழ் ஒதுக்கீடு எதுவுமில்லாமல் ₹59.52 கோடி செலவு செய்யப்பட்டது. வரிசை எண் 1ஐ பொறுத்தவரை செலவினம் மார்ச் 2023ல் செய்யப்பட்டது மற்றும் வரிசை எண் (2) முதல் (6) வரை, செலவினமானது அக்டோபர் 2022 முதல் பிப்ரவரி 2023 இடையே செய்யப்பட்டது என்பது மேலும் கூர்ந்தாய்வு செய்ததில் தெரிய வந்தது. மார்ச் 2023ல் இரண்டாவது மறுநிதியொதுக்கத்தின் போது முழு ஒதுக்கீடும் திரும்பப் பெறப்பட்டதால், இறுதி திருத்த நிதியொதுக்கம் இல்லாமல் செலவு ஏற்பட்டதில் முடிந்தது.

**அட்டவணை 3.9: திட்டங்களின் கீழ் துணை ஒதுக்கீடில் அடையாள ஒதுக்கீடு கொடுக்கப்பட்டு ஆராயது செய்யப்பட்ட மறுநிதியொதுக்கம்**

(₹ இலட்சத்தில்)

| வரிசை எண் | மானிய எண் | கணக்குத் தலைப்பு | துணை ஒதுக்கீடு I | துணை ஒதுக்கீடு II | துணை ஒதுக்கீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | மறு நிதியொதுக்கம் I | மறு நிதியொதுக்கம் II | உள்ள படியான செலவு |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | 34 | 2217.05.191.AJ | 0.00 | 0.01 | அடிப்படை உள்கட்டமைப்புகளை உருவாக்குவதற்கு 28 புதிதாக தரம் உயர்த்தப்பட்ட நகராட்சிகளுக்கு வழங்கப்பட்ட உத்தேச ஒதுக்கீடுகள் (ஒவ்வொன்றுக்கும் தலா 2 கோடி) | 5,599.99 | (-) 5,600.00 | 5,600.00 |
| 2. | 05 | 2408.01.103.AD | 0.01 | 0.00 | 2022-23ல் பிரதம மந்திரியின் முறைப்படுத்துதல் திட்டத்தின் கீழ், சிறு உணவு பதப்படுத்தும் நிறுவனங்களை செயல்படுத்துதல் | 52.83 | (-) 52.84 | 52.83 |
| 3. | 05 | 2408.01.103.UA | 0.01 | 0.01 | | 3,993.03 | (-) 3,993.05 | 245.76 |
| 4. | 05 | 2408.01.793.AA | 0.01 | 0.00 | | 1.13 | (-) 1.14 | 1.14 |
| 5. | 05 | 2408.01.793.UA | 0.01 | 0.01 | | 1,010.88 | (-) 1,010.90 | 45.18 |
| 6. | 05 | 2408.01.794.UA | 0.01 | 0.01 | | 50.53 | (-) 50.55 | 6.70 |
| | | | **0.05** | **0.04** | **மொத்தம்** | **10,708.39** | **(-) 10,708.48** | **5,951.61** |

(*ஆதாரம்: விரிவான நிதியொதுக்க கணக்குகள் 2022-23*)

63 நிகழ்வுகளில், **இணைப்பு 3.9**ல் கூறப்பட்டுள்ளவாறு, முதல் மறுநிதியொதுக்கத்தில் ₹483.76 கோடிக்கு ஒதுக்கீடு கொடுக்கப்பட்டு, இரண்டாவது நிதியொதுக்கத்தில் மூல மற்றும் துணை ஒதுக்கீடுகள் உட்பட ₹502.63 கோடியை திரும்ப பெறப்பட்டதன் விளைவாக செலவு ஏதுமில்லை.

இவ்வாறாக, மறுநிதியொதுக்கத்தின் தேவை மற்றும் தொகையை உறுதி செய்ய தெளிவான செயல்திறன் இல்லாதது மேற்கூறியவற்றிலிருந்து தெளிவாக தெரிய வருகிறது. இது தேவையில்லாத மறுநிதியொதுக்கத்தையும் அதன் விளைவாக ஆண்டு முடிவில் தேவையற்ற சேமிப்புகள்/ஒப்புவிப்புகள் நிகழ்கின்றன.

மேலும், நிதித்துறை வெளியிட்ட மறுநிதியொதுக்க ஆணைகள் மீதான விரிவான கூர்ந்தாய்வில், மொத்தம் உள்ள 25,204 இனங்களுள் 10,436 இனங்களுக்கு (41.41 விழுக்காடு) கூடுதல் நிதி ஒதுக்கீடு/ஒதுக்கீட்டை திரும்ப பெற்றமைக்கு சரியான காரணங்கள் அளிக்கப்படாமல், "உள்ளபடியான தேவை", "குறைந்த/கூடுதல் தேவைப்பாடு", "உள்ளபடியான தேவையின் அடிப்படையில்" போன்ற தெளிவற்ற சொற்றொடர்கள் இடம்பெற்றிருந்ததை காட்டியது. இது தமிழ்நாடு வரவு செலவு திட்ட நடைமுறை நூல், பத்தி **151(ii)**[4]க்கு எதிரானதாகும்.

இவ்வாறாக, பல்வேறு கட்டங்களில் ஆராயாது செய்யப்பட்ட மறுநிதியொதுக்கம் மற்றும் ஒதுக்கீடு இல்லாமல் செலவிடுதல் ஆகியவை, வரவு – செலவு திட்டம் மறுநிதியொதுக்கம் என்ற இரண்டு நிலைகளிலும் உள்கட்டுப்பாட்டு/ கண்காணிப்பு முறைமை வலுவற்று இருப்பதை தெளிவாக சுட்டிக்காட்டின. எனவே, மறுநிதியொதுக்கத்தின் தேவை மற்றும் தொகையை உறுதி செய்ய தெளிவான செயல்திறன் இல்லாதது என்பது தேவையில்லாத மறுநிதியொதுக்கத்தையும் அதன் விளைவாக ஆண்டு முடிவில் தேவையற்ற சேமிப்புகள்/ஒப்புவிப்புகள் நிகழ்கின்றன என்பது வரவு செலவு திட்டத்தின் நம்பகத்தன்மையை பாதிக்கிறது.

### *3.5.1.6 செலவு எதுவும் இல்லாமல் மறுநிதியொதுக்கம் மூலம் கொடுக்கப்பட்ட ஒதுக்கீடு*

**அட்டவணை 3.10**ல் கூறப்பட்டுள்ள ஏழு நேர்வுகளில், ₹403.31 இலட்சம் அளவுக்கு மறுநிதியொதுக்கம் செய்யப்பட்டு, அந்த திட்டங்களுக்கு எந்த ஒரு செலவும் செய்யப்படவில்லை.

**அட்டவணை 3.10: செலவு எதுவும் இல்லாமல் மறுநிதியொதுக்கம் மூலம் கொடுக்கப்பட்ட ஒதுக்கீடு**

(₹ *இலட்சத்தில்*)

| வரிசை எண் | மானிய எண் | கணக்குத் தலைப்பு | மறுநிதியொதுக்கம் மூலம் செய்யப்பட்ட ஒதுக்கீடு |
|---|---|---|---|
| 1 | 04 | 2225.02.796.AE | 190.00 |
| 2 | 16 | 7610.00.202.AA | 7.28 |

4 தமிழ்நாடு வரவு செலவு திட்ட நூலின் 151(ii)ன் படி, கூடுதல் செலவினம் மற்றும் சேமிப்புகளுக்கான காரணங்களை தெளிவாக குறிப்பிட வேண்டும். 'உள்ளபடியான தேவையின் அடிப்படையில்'. 'செலவின் முன்னேற்றம் அடிப்படையில்' போன்ற தெளிவற்ற தொடர்களை பயன்படுத்தக்கூடாது.

| வரிசை எண் | மானிய எண் | கணக்குத் தலைப்பு | மறுநிதியொதுக்கம் மூலம் செய்யப்பட்ட ஒதுக்கீடு |
|---|---|---|---|
| 3 | 16 | 7610.00.202.AB | 3.11 |
| 4 | 16 | 7610.00.204.AA | 2.14 |
| 5 | 41 | 2235.60.102.BL | 0.16 |
| 6 | 47 | 2250.00.102.AC | 200.56 |
| 7 | 54 | 2406.01.102.PF | 0.06 |
| | **மொத்தம்** | | **403.31** |

(*ஆதாரம்: நிதியொதுக்க கணக்குகள் 2022-23*)

இவ்வாறாக, உள்ளபடியான தேவையை உறுதி செய்யாமல் மறுநிதியொதுக்கம் மூலம் தேவையற்ற ஒதுக்கீடு செய்யப்பட்டது என்பது கண்டறியப்பட்டது.

### *3.5.1.7 செலவிடப்படாத தொகை, ஒப்படைக்கப்பட்ட நிதியொதுக்கங்கள் மற்றும்/ அல்லது பெருமளவிலான சேமிப்புகள்/ ஒப்படைப்புகள்*

எதிர்பார்க்கக்கூடிய எந்த ஒன்றுக்கும் வரவு–செலவு திட்டத்தில் இடமளிக்கவும், தேவையான அளவு மட்டுமே அவற்றுக்கு நிதி ஒதுக்கவும் வேண்டும் என்பது மதிப்பிடும் அலுவலர்கள் அனைவருக்கமான அடிப்படை விதி ஆகும். இக்காரணத்திற்காக, செலவிடப்படாமல் போகக்கூடிய நிதி ஒதுக்கீடு கூடிய விரைவில் ஒப்படைப்பாக தெரிவிக்கப்பட வேண்டும். அவ்வாறு ஒப்படைக்கவில்லையெனில், நிதி கிடைத்திருந்தால் அதை செலவிட்டிருக்கக்கூடிய துறைகளுக்கு அது கிடைக்காமல் போகும். ஒப்படைப்புகள் பொதுவாக மார்ச் மாதத்தில் செய்யப்படுகின்றன. நிகழ்ந்துள்ள செலவின் மீதான கண்காணிப்பும், கட்டுப்பாட்டு அலுவலர் தனது இறுதியான நிதி தேவையை தகுந்த அளவிலான துல்லியத்தன்மையுடன் கூடிய வகையில் மதிப்பிடுவதற்கு உதவ வேண்டும். சேமிப்பு தொகைகளை வருங்காலத்தின் கூடுதல் நிதி தேவைக்காக ஒதுக்கி வைக்கக்கூடாது.

பெருமளவிலான சேமிப்புகள் மற்றும் ஒப்புவிப்புகள் ஏற்பட்ட நேர்வுகள் பின்வரும் பத்திகளில் விளக்கப்பட்டுள்ளன.

*(அ) 2022-23ல் நிகழ்ந்த பெரிய சேமிப்புகள்.*

பல்வேறு மானியங்களின் கீழ் தலா ₹100 கோடி அளவிற்கு மேல் சேமிப்பு இருந்த 34 நேர்வுகளில் மொத்தம் ₹33,183.15 கோடி (**இணைப்பு 3.10**) அளவுக்கு சேமிப்பு ஏற்பட்டது என தணிக்கை கண்டறிந்தது. நடப்பாண்டில், தலா ₹10 கோடி அளவுக்கு மேலாக நிதி ஒதுக்கப்பட்டு, அதில் 50 விழுக்காட்டிற்கு குறைவான பயன்பாடு இருந்த மானியங்கள்/நிதியொதுக்கங்கள் பற்றிய விவரங்கள் **அட்டவணை 3.11ல்** தரப்பட்டுள்ள.

**அட்டவணை 3.11: ₹10 கோடிக்கும் மேலான மானியம்/நிதி ஒதுக்கங்களில் 50 விழுக்காட்டிற்கு குறைவான பயன்பாடு இருந்த மானியங்கள்/நிதியொதுக்கங்கள்**

(*₹ கோடியில்*)

| வ எண் | மானியம் மற்றும் விவரம் | மொத்த ஒதுக்கீடு | செலவு | பயன்பாட்டின் விழுக்காடு |
|---|---|---|---|---|
| | **வருவாய்** | | | |
| 1 | 31 – தகவல் தொழில்நுட்பவியல் துறை | 199.20 | 90.03 | 45.20 |
| 2 | 53 – சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை | 56.05 | 6.15 | 10.97 |
| | **மூலதனம்** | | | |
| 3 | 14 – எரிசக்தித்துறை | 581.24 | 57.99 | 9.98 |
| 4 | 16 – நிதித் துறை | 740.65 | 65.20 | 8.80 |
| 5 | 22 – காவல்(உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை | 200.00 | 73.17 | 36.59 |
| 6 | 43 – பள்ளிக் கல்வித்துறை | 544.96 | 217.54 | 39.92 |
| 7 | 45 – சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை | 54.04 | 23.26 | 43.04 |
| | **கடன்கள்** | | | |
| 8 | 14 - எரிசக்தித்துறை | 1,843.78 | 379.60 | 20.59 |
| 9 | 16 - நிதித்துறை | 128.97 | 57.08 | 44.26 |
| 10 | 22 - காவல்(உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை | 21.15 | 9.21 | 43.55 |


(*ஆதாரம்: நிதியொதுக்க கணக்குகள்*)

இரண்டு நேர்வுகளில் ஒதுக்கீட்டில் 10 விழுக்காட்டிற்கும் கீழே பயன்பாடு இருந்தது தெரிய வந்தது.

2022-23ல் மானியங்கள் பயன்பாட்டு விழுக்காடு அடிப்படையில் தொகுக்கப்பட்டு அதன் மொத்த சேமிப்பு பற்றிய விவரங்கள் **விளக்கப்படம் 3.4**ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**விளக்கப்படம் 3.4: மானியங்கள் பயன்பாட்டு விழுக்காடு அடிப்படையில் தொகுக்கப்பட்டு அதன் மொத்த சேமிப்பு பற்றிய விவரங்கள்**

**(₹ கோடியில்)**



இவ்வாறாக, பெரிய அளவிலான சேமிப்புகள் வரவு செலவு திட்ட குறைபாட்டையும் மற்றும் மானியம் அல்லது நிதியொதுக்கத்தின் செயலாக்கத்திலுள்ள குறைபாடுகளையும் குறிக்கிறது.

*(ஆ) சேமிப்புகளை ஒப்படைத்தல்*


தமிழ்நாடு வரவு–செலவு திட்ட நடைமுறை கையேடு பத்தி 140ன் படி, நிதியை செலவிடும் துறைகள், மானியங்கள்/நிதியொதுக்கங்களை அல்லது அவற்றில் ஒரு பகுதியை, சேமிப்பு எதிர்நோக்கப்பட்டவுடன், நிதித்துறையிடம் ஒப்படைக்க வேண்டும்.

நடப்பாண்டில், ₹35,089.39 கோடி மொத்த சேமிப்பில் ₹35,039.53 கோடி மட்டுமே ஒப்படைக்கப்பட்டது. இறுதி நாளன்று (31 மார்ச் 2023) ஒப்படைக்கப்பட்ட ₹13,320.27 கோடி (நிகரம்) தொகை **விளக்கப்படம் 3.5**ல் தரப்பட்டுள்ளது. மொத்தம் ₹12,979.70 கோடி (**இணைப்பு 3.11**) மதிப்புள்ள 89 நேர்வுகள் தலா ₹10 கோடி தொகைக்கு மேற்பட்ட மதிப்புடையவை ஆகும்.

மேலும் சேமிப்பை விட அதிகமாக ஒப்படைப்பது தொடர்பாக, நிதியாண்டின் இறுதியில் ஒப்படைக்கப்பட வேண்டிய சேமிப்பின் சரியாக அளவை, மறுநிதியொதுக்கத்தின் போது துறைகளால் அறிய முடியவில்லை. சேமிப்புகள் ₹ ஒரு கோடிக்கு மேல் இருந்த 24 அனுமதிக்கப்பட்ட மானியம் மற்றும் ஒரு சாட்டிய நிதியொக்கத்தின் கீழ், ₹632.68 கோடியை **இணைப்பு 3.12**ல் கூறப்பட்டுள்ளவாறு முழுமையாக ஒப்படைக்கவில்லை. வருவாய் கணக்கின் கீழ் ஏழு மானியங்கள்/நிதியொதுக்கங்கள், மூலதன கணக்கின் கீழ் 10 மானியங்கள் மற்றும் கடன்கள் கீழ் மூன்று மானியங்கள் என சேமிப்புகளைவிட ஒப்படைப்புகள், **இணைப்பு 3.13**ல் கூறப்பட்டுள்ளவாறு, இருந்தன. இது, IFHRMSஐ நடைமுறைப்படுத்திய பிறகும் கூட, நிதித் துறையிடம் போதிய கட்டுப்பாடு இல்லாததை சுட்டிக்காட்டுகிறது.

**விளக்கப்படம் 3.5 : 2022-23க்கான சேமிப்புகள் மற்றும் ஒப்படைப்புகள்**

(₹ கோடியில்)




*(இ) வரவு செலவுத் திட்ட பயன்பாடு*

பயன்பாட்டு விழுக்காட்டின் அடிப்படையில் பிரிவுகளாக தொகுக்கப்பட்ட மானியங்கள்/ நிதியொதுக்கங்களின் எண்ணிக்கையும் ஒவ்வொரு பிரிவிலும் நேர்ந்த சேமிப்புகளையும் கீழே உள்ள **அட்டவணை 3.12**ல் கொடுக்கப்பட்டுள்ளது:

**அட்டவணை 3.12: மானிய/நிதியொதுக்கத்தின் பயன்பாடு**

| பயன்பாட்டு விழுக்காடு | 0 முதல் 50 விழுக்காடு வரை | 50 முதல் 70 விழுக்காடு வரை | 70 முதல் 90 விழுக்காடு வரை | 90 முதல் 100 விழுக்காடு வரை |
|---|---|---|---|---|
| மானியங்களின் எண்ணிக்கை | 1 | 2 | 23 | 30 |
| சேமிப்புகள் (₹ கோடியில்) | 49.90 | 1,483.76 | 23,099.68 | 10,456.05 |

(*ஆதாரம்: நிதியொதுக்க கணக்குகள் 2022-23*)

### *(ஈ) தொடர் சேமிப்புகள்*

கடந்த ஐந்தாண்டுகளில், **இணைப்பு 3.14**ல் கூறப்பட்டுள்ளவாறு, மொத்த ஒதுக்கீட்டில் ஐந்து விழுக்காட்டிற்கும் மேலான தொடர்ந்த சேமிப்பு 26 மானியங்கள்/ நிதியொதுக்கங்களில் ஏற்பட்டது. சேமிப்பின் விழுக்காடு வருவாய் பிரிவில் 5.85 முதல் 54.80 வரையிலும், மூலதன பிரிவில் 8.51 முதல் 91.20 விழுக்காடு வரையிலும் இருந்தது.

மானியம் 16-நிதித்துறையின் கீழ் கடந்த ஐந்தாண்டு காலம் முழுவதும் தொடர்ச்சியாக 91 விழுக்காட்டிற்கு மேலாக மூலதனப் பிரிவின் கீழ் சேமிப்பு இருந்ததை **இணைப்பு 3.14** காட்டுகிறது. **அட்டவணை 3.13**ல் கூறப்பட்டுள்ளவாறு, கடந்த ஒன்பது ஆண்டுகளில் '4070-00-800-KF – தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாடு நிதிக்கு மாற்றம்' என்ற கணக்குத் தலைப்பின் கீழ் பெருமளவு நிதி ஒதுக்கப்பட்டு, அது மறுநிதியொதுக்கம் மூலம் திரும்ப பெறப்பட்டது.

**அட்டவணை 3.13: தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் செய்யப்பட்ட ஒதுக்கீடு மற்றும் மறுநிதியொதுக்கம்**

(*₹ கோடியில்*)

| விவரம் | 2014-15 | 2015-16 | 2016-17 | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 | 2022-23 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஒதுக்கீடு | 2000 | 2000 | 2000 | 2000 | 500 | 500 | 500 | 500 | 500 |
| மறுநிதியொதுக்கம் | (-)2000 | (-)1980 | (-)1970 | (-)2000 | (-)499 | (-)498 | (-)500 | (-)457 | (-)500 |

(*ஆதாரம்: அந்தந்த வருடத்திய நிதியொதுக்க கணக்குகள்*)

கடந்த எல்லா ஆண்டுகளிலும் தொடர்ச்சியாக வரவு – செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டு குறிப்பான காரணங்கள் அளிக்கப்படாமல் மறுநிதியொதுக்கம் மூலம் திரும்ப பெறப்பட்டது என்பதை மேற்படி அட்டவணையிலிருந்து அறியலாம். இந்த குறைபாடுகளை கடந்த மார்ச் 2022 தணிக்கை அறிக்கையில் சுட்டிக் காட்டிய போதும் இக்குறைபாடுகள் தொடர்ந்து நிகழ்கிறது.

இதை சுட்டிக்காட்டிய போது, தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் (TNIDB), உள்கட்டமைப்பு திட்டங்களுக்கான நிதி உதவி, TNIDB ஒப்புதல் கிடைத்து மற்றும் அந்த திட்டத்திற்கான ஒப்பந்தத்திற்கு பிறகே, பரிசீலிக்கப்படும் என பதிலளித்தது (அக்டோபர் 2023). பல உள்கட்டமைப்பு திட்டங்கள் ஆரம்ப நிலையில் இருப்பதால், செயல்படுத்தும் முகமைகள் நிதி

உதவியை கோர வேண்டிய தேவை எழவில்லை என்றும், கடந்த ஆண்டுகளில் நிதிகள் ஒப்படைப்பு செய்யப்பட்டன என்றும் அரசு மேலும் பதிலளித்தது. ஏற்கெனவே உள்ள நிதி தீர்ந்த பிறகே, அரசாங்கத்திடம் TNIDB கோரும் எனவும் கூறியது.

உள்ளபடியான தேவையை கணிக்காமல் வரவு செலவு திட்ட ஒதுக்கீடு செய்யப்பட்டது என்பது மேற்கூரிய பதிலில் இருந்து தெரிய வருகிறது. கடந்த கால ஒப்படைப்புகளை கருத்தில் கொண்டு உள்ளபடியான தேவைக்கான மாற்றத்தை மதிப்பிட வேண்டும். இந்த மாதிரியான சூழ்நிலைகளில், அதிகப்படியாக ஒதுக்கீடுகள் தராமல் வரவு செலவுத் திட்டத்தில் அடையாள ஒதுக்கீடு செய்யலாம்.

இவ்வாறாக, உள்ளபடியான தேவையை ஆராயாமல், குறைபாடுள்ள வரவு செலவு திட்டத்தால் கூடுதல் ஒதுக்கீடு செய்து பின்னர் அவை மறுநிதியொதுக்கம் மூலம் திரும்ப பெறப்படுகிறது. இதனால், அந்த வருடத்தில் தேவைப்படும் மற்ற துறைகள்/திட்டங்களுக்கு நிதி கிடைக்காமல் போக வாய்ப்புண்டு.

### *3.5.1.8 மிகை செலவும் அதன் முறைப்படுத்தலும்*

இந்திய அரசியலமைப்பு சட்டம், பிரிவு 205(1)(b)ன் படி, ஒரு மானியம்/நிதியொதுக்கத்தின் கீழ் ஏற்பட்ட மிகை செலவு மாநில சட்டமன்றத்தின் மூலம் முறைப்படுத்தப்பட வேண்டும் என்பது மாநில அரசுக்கு கட்டாயமாகும். மிகை செலவை முறைப்படுத்த ஒரு காலக்கெடுவை இப்பிரிவு குறிப்பிடாவிட்டாலும், நிதியொதுக்க கணக்குகளை பொது கணக்குகள் குழு விவாதித்த பின் மிகை செலவுகள் முறைப்படுத்தப்படுகின்றன.

*(அ) முறைப்படுத்தப்பட்ட வேண்டிய மிகை செலவு*

**அட்டவணை 3.14**ல் கூறப்பட்டுள்ளவாறு, 2014-22 காலகட்டத்தில் நேர்ந்த மிகை செலவான ₹2,854.07 கோடியை மாநில சட்டமன்றத்தால் முறைப்படுத்தப்பட வேண்டியுள்ளது (செப்டம்பர் 2023).

**அட்டவணை 3.14: கடந்த ஆண்டுகளில் மிகை செலவினம் செய்யப்பட்டு முறைப்படுத்தப்பட வேண்டியவை**

| ஆண்டு | மானிய எண்/ நிதியொதுக்கம் | முறைப்படுத்தப்பட வேண்டிய மிகை செலவு (₹ *கோடியில்*) | முறைப்படுத்துதலின் நிலை |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 2014-15 | 10, 16, 23,30, 32, 35, 36, 40, 43, 45 | 78.55 | 82வது பொது கணக்கு குழுவின் அறிக்கை, பொது கணக்கு குழு பரிந்துரைத்துள்ளவாறு, 12 ஜனவரி 2023ல் சட்டசபையில் தாக்கல் செய்யப்பட்டது. |
| 2015-16 | 19, 23, 30, 39, 47, 49 | 82.16 | |
| 2016-17 | 10, 12, 17, *21*, 32, 39, 40 | 167.16 | 2016-17, 2017-18 மற்றும் 2018-19 ஆண்டுகளில் சம்பந்தப்பட்ட 17 மானியங்கள் மற்றும் ஆறு நிதியொக்கங்கள் 20.09.2023 அன்று பொது கணக்கு குழுவால் |
| 2017-18 | 06, 10, 13, 19, 21, 24, 40, 41, 52 | 77.55 | |
| 2018-19 | 10, 15, 27, 37, 40, 42, 43 | 1,480.54 | |

| ஆண்டு | மானிய எண்/ நிதியொதுக்கம் | முறைப்படுத்தப்பட வேண்டிய மிகை செலவு (₹ கோடியில்) | முறைப்படுத்துதலின் நிலை |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | | விவாதிக்கப்பட்டது மற்றும் பொது கணக்கு குழுவின் பரிந்துரைகள் பெறப்பட வேண்டியுள்ளது. |
| 2019-20 | 13, 40, 41, 43, 48 | 942.00 | இரண்டு மானியங்களுக்கான விளக்க குறிப்பு (13 மற்றும் 43) பெறப்படவில்லை. |
| 2020-21 | 27 | 20.87 | மானியத்திற்கான விளக்க குறிப்பு பெறப்பட்டுள்ளது மற்றும் பொது கணக்கு குழுவின் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டியுள்ளது. |
| 2021-22 | 34, 35, 44, 51 | 5.24 | எல்லா நான்கு மானியங்களுக்கும் விளக்ககுறிப்பு பெறப்படவில்லை. |
| | மொத்தம் | 2,854.07 | |

(*ஆதாரம்: நிதியொதுக்க கணக்குகள்*)

தவறான வகைப்படுத்தல் காரணமாக, 2022-23 ல் ₹0.50 இலட்சத்திற்கான மிகை செலவு வருவாய் கணக்கின் (சாட்டியது) கீழ் மானிய எண் 51 – இயற்கை பேரிடர் துயர் தணிப்பில் நேர்ந்தது. மேலும், சட்டப் பேரவையில் முறைப்படுத்தப்படாமல் ஒதுக்கீட்டிற்கு அதிகமாகச் செலவு செய்வது என்பது இந்திய அரசியலமைப்புச் சட்டம் 205 (1)(b)க்கு எதிரானது.

### 3.5.2 வரவு – செலவு திட்டம் மற்றும் கணக்குவைப்பு முறையின் செயல்திறன் குறித்த குறிப்புகள்

#### *3.5.2.1 வரவு–செலவு திட்ட மதிப்பீடு மற்றும் எதிர்பார்ப்பிற்கும் உள்ளபடியானவற்றுக்கும் இடையேயான இடைவேளி*

நிதி சார்ந்த பல்வேறு குறியீடுகளை எய்துவதற்கு, வரி நிர்வாகம்/ பிற வரவு மற்றும் பொது செலவு மீதான திறனுள்ள மேலாண்மை இன்றியமையாதது. உண்மை நிலைக்கு பொருந்தாத கருத்துருக்கள் அடிப்படையிலான நிதி ஒதுக்கீடு, செலவு கண்காணிப்பு முறையில் குறைபாடுகள், வலுவற்ற திட்ட செயல்பாட்டு திறன்கள், வலுவற்ற உள்கட்டுப்பாடுகள் ஆகியவற்றின் காரணமாக பல்வேறு வளர்ச்சி திட்டங்களுக்கு குறைவான நிதி ஒதுக்கீடு அமைகிறது. சில துறைகளில் ஏற்படும் அளவுக்கதிகமான சேமிப்பு, நிதி கிடைத்திருந்தால் பயன்படுத்தியிருக்கக்கூடிய பிற துறைகளுக்கு நிதி கிடைக்கவிடாமல் செய்கிறது.

2022-23 ஆண்டில் வரவு–செலவு திட்ட ஒதுக்கீட்டுடன் (மூல மற்றும் துணை ஒதுக்கீடுகள்) ஒப்பிட்ட வகையில் அனுமதிக்கப்பட்ட மற்றும் சாட்டிய வகைகளின் கீழ் உள்ளப்படியான செலவின் சுருக்கம் **அட்டவணை 3.15**ல் தரப்பட்டுள்ளது.

**அட்டவனை 3.15: மூல/துணை ஒதுக்கீடுகளுக்கெதிராக உள்ளபடியான செலவின் நிலை**


(₹ *கோடியில்*)

| செலவின் தன்மை | மூல மாணியம்/ நிதி யொதுக்கம் | துணை மாணியம் / நிதி யொதுக் கம் | மொத்தம் | உள்ள படியான செலவு | நிகர சேமிப்பு | ஒப்படைக் கப்பட்ட தொகை | 31 மார்ச் அன்று ஒப்படைக் கப் பட்ட தொகை | ஒப்படைப்பு செய்யப் பட்ட சேமிப்பின் விழுக்காடு |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) = ((7)/(6)) x 100 |
| ***அனுமதிக்கப்பட்டது*** | | | | | | | | |
| I வருவாய் | 2,36,831.52 | 21,306.73 | 2,58,138.24 | 2,36,906.17 | (-) 21,232.07 | (-) 21,077.90 | (-) 10,035.41 | *99.27* |
| II மூலதன வகை | 43,067.80 | 5,201.19 | 48,269.00 | 39,548.12 | (-) 8,720.88 | (-) 8,758.44 | (-) 2,746.43 | *100.43* |
| III கடன்களும் முன்பணங்களும் | 6,019.61 | 3,218.03 | 9,237.63 | 7,260.82 | (-) 1,976.81 | (-) 1,975.57 | (-) 277.20 | *99.94* |
| **மொத்தம்– அனுமதிக்கப்பட்டது** | **2,85,918.93** | **29,725.95** | **3,15,644.87** | **2,83,715.11** | (-) **31,929.75** | (-) **31,811.91** | (-) **13,059.04** | 99.63 |
| **சாட்டியது** | | | | | | | | |
| IV வருவாய் வகை | *51,055.43* | *191.88* | *51,247.31* | *48,122.62* | *(-) 3,124.69* | *(-) 3,192.73* | *(-) 249.57* | *102.18* |
| V மூலதன வகை | *5.00* | *230.87* | *235.87* | *224.20* | *(-) 11.67* | *(-) 11.66* | *(-) 11.66* | *99.91* |
| VI பொது கடன் மீள செலுத்துதல் | *27,127.67* | *0.00* | *27,127.67* | *27,104.39* | *(-) 23.28* | *(-) 23.23* | *0.00* | *99.79* |
| **மொத்தம்– சாட்டியது** | ***78,188.10*** | ***422.75*** | ***78,610.85*** | ***75,451.21*** | *(-) **3,159.64*** | *(-) **3,227.62*** | *(-) **261.23*** | *102.15* |
| **எதிர்பாரா செலவு நிதிக்கு ஒதுக்கீடு** | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| **பெரு மொத்தம்** | **3,64,107.03** | **30,148.70** | **3,94,255.72** | **3,59,166.32** | (-) **35,089.39** | (-) **35,039.53** | (-) **13,320.27** | 99.86 |

(*ஆதாரம்: நிதியொதுக்க கணக்குகள்* 2022-23)

2018-19 முதல் 2022-23 வரையிலான காலகட்டத்தில் வரவு செலவு திட்ட பயன்பாடு **விளக்கப்படம் 3.6ல்** காட்டப்பட்டுள்ளது.

**விளக்கப்படம் 3.6 : 2018-19 முதல் 2022-23 வரையிலான காலகட்டத்தில் வரவு செலவு திட்ட பயன்பாடு**




(ஆதாரம்: நிதியொதுக்க கணக்குகள் 2022-23)

நடப்பாண்டில் பயன்பாட்டின் விழுக்காடு 0.21 விழுக்காடு குறைந்து 91.10 விழுக்காடாக இருந்தது.

54 மானியங்கள் மற்றும் இரண்டு நிதியொதுக்கங்களின், 2022-23ம் ஆண்டிற்கான மொத்த ஒதுக்கீடு, செலவு மற்றும் சேமிப்பு/மிகையின்

**சுருக்கம் அனுமதிக்கப்பட்ட / சாட்டிய வகைகளுக்கான பிரிவு விவரங்களுடன் அட்டவணை 3.16ல் கொடுக்கப்பட்டுள்ளது.**

**அட்டவணை 3.16: வரவு செலவு திட்டத்தின் சுருக்கம்**

**(₹ *கோடியில்*)**

| வரவு செலவு திட்ட ஒதுக்கீடு | | செலவு | | சேமிப்பு (–) | | மிகை (+) | |
|---|---|---|---|---|---|---|---|
| அனுமதிக்கப் பட்டது | சாட்டியது | அனுமதிக்கப் பட்டது | சாட்டியது | அனுமதிக்கப் பட்டது | சாட்டியது | அனுமதிக்கப் பட்டது | சாட்டியது |
| 3,15,644.88 | 78,610.85 | 2,83,715.11 | 75,451.22 | (-) 31,929.76 | (-) 3,159.64 | -- | --* |

* ₹ 0.50 *இலட்சம்: மானிய எண்* 51 – 2245-80-800-AH*ல் அனுமதிக்கப்பட்ட செலவினத்தை* 2245-02-101-AB*ன் கீழ் சாட்டியதாக தவறாக வகைப்படுத்தியதால் மிகை செலவினம் ஏற்பட்டது.*

(*ஆதாரம்: நிதியொதுக்க கணக்குகள்*)

**மேலே கூறப்பட்டுள்ளவைகளிலிருந்து ஒட்டுமொத்த சேமிப்பு ₹35,089 கோடி என கணக்கிடப்பட்டுள்ளது. தொகுநிதியின் உள்ளபடியான வரவினம், வரவு செலவு திட்டத்தில் எதிர்நோக்கப்பட்ட வரவைவிட ₹11,685 கோடி குறைவு ஆகும் மற்றும் உள்ளபடியான செலவு, வரவு செலவு திட்டத்தைவிட ₹6,519 கோடி குறைவு. இது ₹7,929 கோடி மிகை செலவுக்கு வழிவகுத்தது. இது பொது கணக்கிலிருந்து எதிரேற்கப்பட்டது. தேவையில்லாத துணை ஒதுக்கீடு மூலம் நேர்ந்த சேமிப்பான ₹35,089 கோடி என்பது ஒதுக்கீட்டினால் ஏற்பட்ட உத்தேச சேமிப்பாகும்.**

**மார்ச் 2023ல் ₹35,039.52 கோடி ஒப்படைக்கப்பட்டது. இதில், ₹13,320.27 கோடி (38.01 விழுக்காடு) கடைசி நாளில் அதாவது 31 மார்ச் 2023ல் ஒப்படைக்கப்பட்டன என்று பத்தி 3.5.1.7(ஆ)ல் விவாதிக்கப்பட்டுள்ளது. இது வரவு செலவு திட்டம் மற்றும் செலவு திட்டமிடலில் உள்ள குறைபாடுகளை சுட்டிக்காட்டியது.**

**கடந்த ஐந்தாண்டுகளில் நேர்ந்த செலவுகளின் போக்குகள் மூல மற்றும் திருத்திய மதிப்பீடுகளுடன் ஒப்பிட்டு அட்டவணை 3.17ல் தரப்பட்டுள்ளன.**

**அட்டவணை : 3.17: 2018-23 காலகட்டத்தில் உள்ள மொத்த வரவு செலவு திட்டம், திருத்திய மதிப்பீடு மற்றும் உள்ளபடியான செலவினம் ஆகியவற்றின் போக்குகள்**


**(₹ *கோடியில்*)**

| | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 | 2022-23 |
|---|---|---|---|---|---|
| மூல ஒதுக்கீடு | 2,43,847.26 | 2,68,501.58 | 3,04,954.44 | 3,35,288.14 | 3,64,107.02 |
| துணை ஒதுக்கீடு | 24,146.16 | 19,851.68 | 34,018.02 | 14,451.49 | 30,148.70 |
| மொத்த வரவு செலவு திட்டம் (TB) | 2,67,993.42 | 2,88,353.26 | 3,38,972.45 | 3,49,739.63 | 3,94,255.72 |
| திருத்திய மதிப்பீடு (RE) | 2,48,360.08 | 2,70,255.50 | 3,29,034.84 | 3,20,375.66 | 3,48,450.41 |
| உள்ளபடியான செலவு (AE) | 2,48,170.03 | 2,61,259.86 | 2,93,753.73 | 3,19,361.82 | 3,59,166.33 |
| சேமிப்பு | (-) 19,823.39 | (-) 27,093.40 | (-) 45,218.72 | (-) 30,377.81 | (-) 35,089.39 |
| *மூல ஒதுக்கீட்டில் துணை ஒதுக்கீட்டின் விழுக்காடு* | *9.90* | *7.39* | *11.16* | *4.31* | *8.28* |
| *ஒட்டுமொத்த ஒதுக்கீட்டில் ஒட்டுமொத்த சேமிப்பு/ மிகையின் விழுக்காடு* | *7.40* | *9.40* | *13.34* | *8.69* | *8.90* |
| TB-RE | 19,633.34 | 18,097.76 | 9,937.61 | 29,363.97 | 45,805.31 |
| RE-AE | 190.05 | 8,995.64 | 35,281.11 | 1,013.84 | (-)10,715.92 |
| (TB-RE) TBல் விழுக்காடு | *7.33* | *6.28* | *2.93* | *8.40* | *11.62* |
| (RE-AE) TBல் விழுக்காடு | *0.07* | *3.12* | *10.41* | *0.29* | *(-)2.72* |

(*ஆதாரம்: அந்தந்த வருடத்திய நிதியொதுக்க கணக்குகள் மற்றும் ஆண்டு நிதி அறிக்கைகள்*)

2022-23 ல் துணை ஒதுக்கீடான ₹30,148.70 கோடி மூல ஒதுக்கீட்டில் 8.28 விழுக்காடாக இருந்தது என்பது அட்டவணை 3.17லிருந்து தெரிய வருகிறது. இது கடந்தாண்டில் 4.31 விழுக்காடாக இருந்தது.

விளக்கப்படம் 3.7 : மொத்த வரவு செலவு, திருத்தப்பட்ட மதிப்பீடு மற்றும் உண்மையான செலவினங்களைக் காட்டும் போக்கு





2018-19 முதல் 2022-23 வரையிலான கால கட்டத்தில் திருத்திய மதிப்பீடு மாநில வரவு செலவு திட்டத்தைவிட குறைவாக இருந்தது என்பது மேலே சொன்ன அட்டவணையிலிருந்து தெரிய வருகிறது. மொத்த வரவு செலவு திட்டத்திற்கும் திருத்திய மதிப்பீட்டிற்கும் உள்ள இடைவெளி முதல் மூன்று ஆண்டுகளில் (2018-19 முதல் 2020-21 வரை) குறைந்து வந்த நிலையில், அடுத்த இரண்டு ஆண்டுகளில் (2021-22 மற்றும் 2022-23) கணிசமாக உயர்ந்தது. திருத்திய மதிப்பீட்டிற்கும் வரவு திட்ட மதிப்பீட்டிற்கும் உள்ள இடைவெளி என்பது மதிப்பீட்டு தவறை குறிக்கிறது.

**விளக்கப்படம் 3.7**ல் காட்டப்பட்டுள்ளவாறு, 2018-19 முதல் 2021-22 வரையிலான காலகட்டத்தில் உள்ளபடியான செலவினம் திருத்திய மதிப்பீட்டைவிட குறைவாக இருந்த நிலையில் 2022-23ல் செலவினம் திருத்திய மதிப்பீட்டைவிட கூடுதலாக இருந்தது. 2018-19 முதல் 2020-21 வரையிலான காலகட்டத்தில் செலவினத்திற்கும் திருத்திய மதிப்பீட்டிற்கும் உள்ள இடைவெளி அதிகரித்துவரும் நிலையில், 2021-22ல் குறைந்தது. 2022-23ல், இந்த இடைவெளி எதிர்மறையாகி ₹(-)10,715.92 கோடியாக இருந்தது.

2019-20 முதல் 2022-23 வரையிலான காலகட்டத்தில் உள்ளபடியான செலவினம் மூல ஒதுக்கீட்டிற்குள் இருந்ததால், துணை ஒதுக்கீடு தேவையற்றதானது. இது, உண்மையான வரவு செலவு திட்ட மதிப்பீடு தயாரிப்பதில் உள்ள திறனில் உள்ள குறைபாட்டை குறிக்கிறது.

4,900 துணை தலைப்புகளில், நிதியொதுக்க கணக்குகளில் 1,423 துணை தலைப்புகளில் குறித்துரைகள் உள்ளன. சேமிப்பு/மிகை வேறுபாட்டிற்கான காரணங்கள் 1,196 துணை தலைப்புகளுக்கு மட்டுமே பெறப்பட்டன என்பது **விளக்கப்படம் 3.8**ல் காட்டப்பட்டுள்ளது.

**விளக்கப்படம் 3.8 : ஒதுக்கீடு கணக்குகளில் உள்ள விளக்கம்**




### *3.5.2.2 வரவு செலவு திட்டத்தில் அறிவிக்கப்பட்ட பெரிய கொள்கை முடிவுகள் மற்றும் அதனை செயல்படுத்துவதை உறுதி செய்வதற்கான உள்ளபடியான நிதி*

2022-23 வரவு செலவு திட்டத்தில் மாநில அரசு நிறைய திட்டங்கள்/கொள்கை முடிவுகளை அறிவித்தது. மாநில வரவு செலவு திட்டம் 2022-23ஐ பகுப்பாய்வு செய்ததில், சில அறிவிப்புகள் ஒதுக்கீடுகள் இல்லாத காரணத்தால் நடைமுறைப் படுத்தப்படவில்லை. மற்ற சில திட்டங்களில் ஒதுக்கீடுகள் முழுமையாகவோ அல்லது பகுதியளவோ பயன்படுத்தப்படவில்லை. குறிப்பாக குறைந்த வருவாய் பிரிவினருக்கு, பெண்களுக்கு அதிகாரமளிக்கும் பொருட்டு, பொதுமக்களிடம் வரவேற்பு பெற்ற திட்டமான, 'பெண்களுக்கான இலவச பேருந்து' திட்டத்தில் ஒதுக்கீடுகள் முழுமையாக பயன்படுத்தப்பட்டன.

முக்கியமான கொள்கை முடிவுகள் மற்றும் செயல்படுத்தப்பட்ட பல்வேறு திட்டங்களை சோதனை சரிபார்ப்பு செய்ததில் எழுந்த காண்புரைகள் **அட்டவணை 3.18**ல் கூறப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.18: 2022-23ல் அறிவிக்கப்பட்ட பெருந்திட்டங்களின் பகுப்பாய்வு**

*(₹ கோடியில்)*

| வரிசை எண் | மானிய எண் | திட்டங்களின் பெயர் | வரவு செலவு திட்ட உரையில் கூறப்பட்டுள்ள தொகை | மூல / திருத்திய ஒதுக்கீட்டில் அளிக்கப்பட்ட தொகை | செலவு |
|---|---|---|---|---|---|
| I- வரவு செலவு திட்ட ஒதுக்கீடு இல்லாமல் அறிவிக்கப்பட்டவை | | | | | |
| 1 | 45 | சமூக அதிகாரமளித்தலுக்காக ஒருங்கிணைந்த பயிற்சி மையத்திற்கான கட்டிடம் கட்டுவதற்காக | 27.00 | 0.00 | 0.00 |
| II- வரவு செலவு திட்ட ஒதுக்கீட்டை முழுமையாக திரும்ப பெறப்பட்டமைவ | | | | | |
| 2 | 27 | ஏற்றுமதி ஊக்குவிப்பு நிதி | 100.00 | 100.00 | 0.00 |
| 3 | 16 | புதிய தொழில்களுக்கான முதலீட்டு நிதி | 50.00 | 50.00 | 0.00 |
| 4 | 54 | நீலகிரி வரையாடு திட்டம் | 10.00 | 10.00 | 0.00 |
| III- அறிவிக்கப்பட்டதைவிட குறைவாக வரவு செலவு திட்ட ஒதுக்கீடு | | | | | |
| 5 | 42 | ஜல் ஜீவன் திட்டம் (முன்பு தேசிய ஊரக குடிநீர் திட்டம்) | 3,000.00 | 915.04 | 915.04 |

| வரிசை எண் | மானிய எண் | திட்டங்களின் பெயர் | வரவு செலவு திட்ட உரையில் கூறப்பட்டுள்ள தொகை | மூல / திருத்திய ஒதுக்கீட்டில் அளிக்கப்பட்ட தொகை | செலவு |
|---|---|---|---|---|---|
| 6 | 26 | அனைவருக்கும் வீட்டு வசதி – பிரதம மந்திரியின் நகர்ப்புற வீட்டுவசதி திட்டம் | 3,700.00 | 1,252.58 | 1,252.58 |
| 7 | 42 | அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் | 1,455.00 | 250.00 | 334.47 |
| 8 | 42 | சமத்துவபுரங்களை மறுசீரமைத்தல் மற்றும் மறுகட்டுமானம் | 190.00 | 45.55 | 67.01 |
| IV- அறிவிக்கப்பட்டதை விட செலவு குறைவாக இருத்தல் | | | | | |
| 9 | 45 | மூவலூர் இராமிர்த அம்மையார் பெண் குழந்தைகள் உயர் கல்வி உத்திரவாத திட்டம் | 698.00 | 697.78 | 104.06 |
| 10 | 49 | தமிழ்நாடு ஒலிம்பிக் தங்க வேட்கைக்கு மானியம் | 25.00 | 25.00 | 1.00 |

(*ஆதாரம்: தமிழ்நாடு வரவு செலவு திட்டம்* 2022-23 *மற்றும் நிதியொதுக்க கணக்குகள்* 2022-23)

இவ்வாறு, மேலே சொன்ன நிகழ்வுகளிலிருந்து ஒதுக்கீடுகள் முழுமையாகவோ/பகுதியளவோ திரும்ப பெறப்பட்டன மற்றும் குறைந்த அளவே செலவு செய்தன என்பது வரவு செலவு திட்ட உரையில் குறிப்பிட்ட திட்டங்களை செயல்படுத்தாததை குறிக்கிறது.

### *3.5.2.3 விரைவுபடுத்தப்பட்ட செலவு*

அரசின் நிதி ஆண்டு முழுவதும் சமமாக செலவிடப்பட வேண்டும். நிதி ஆண்டின் இறுதியில் செலவை விரைவுபடுத்துவது என்பது நிதி ஒழுங்குமுறையை மீறுவதாகும். செலவு செய்வதில் சீரான போக்கை பின்பற்றுவது, சிறந்த பொது நிதி மேலாண்மையின் முக்கிய கூறு ஆகும். ஏனெனில், ஒரு மாதத்தில் நிகழும் எதிர்நோக்கப்படாத பெருமளவிலான செலவின் விளைவாக அம்மாதத்தில் வரவுக்கும் செலவுக்கும் இடையே பொருத்தமின்மையால் ஏற்படும் நிதிவகையிலான ஏற்றத்தாழ்வு மற்றும் தற்காலிக நிதி தட்டுப்பாட்டை அவ்வழக்கம் தடுக்கும்.

தமிழ்நாடு நிதி விதித் தொகுப்பின் பிரிவு 39ன் படி, நிதியாண்டின் இறுதி மாதத்தில் செலவை விரைவுபடுத்துவது தவிர்க்கப்பட வேண்டும். இதற்கு முரணாக, **இணைப்பு 3.15ல்** பட்டியலிடப்பட்டுள்ள 101 துணை தலைப்புகளின் கீழ் மூல ஒதுக்கீட்டின்போது ஒதுக்கப்பட்ட ₹3,802.84 கோடி தொகை முழுவதும் மார்ச் 2023ல் செலவிடப்பட்டது. மேலும் **அட்டவணை 3.19ல்** பட்டியலிடப்பட்டுள்ள ஒரு மானியத்தில் 50 விழுக்காடு செலவு மார்ச் 2023 ல் செய்யப்பட்டது. ஆண்டு இறுதியில் செய்யப்பட்ட விரைவான செலவு கட்டுப்பாட்டில் குறைபாடுகளை காட்டுகிறது.

**அட்டவணை 3.19: மார்ச் மாதத்தில் மட்டும் 50 விழுக்காடு செலவு நேர்ந்த மானியம்**


**(₹ *கோடியில்*)**

| வ எண் | மானிய என் | விவரம் | 1வது காலாண்டு | 2வது காலாண்டு | 3வது காலாண்டு | 4வது காலாண்டு | மொத்தம் | மார்ச் மாத செலவு | மொத்த செலவில் மார்ச் மாத செலவின் விழுக்காடு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | 08 | பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை) | 17.57 | 21.59 | 23.69 | 286.34 | 349.19 | 180.79 | *51.77* |

(*ஆதாரம்*: VLC *தரவுகளிலிருந்து தொகுக்கப்பட்டது*)

2022-23ம் ஆண்டின் மாதவாரியான வரவு மற்றும் செலவு விவரங்களை **விளக்கப்படம் 3.9** காட்டுகிறது.

**விளக்கப்படம் 3.9 : மாதாந்திர வருவாய் வரவினம் மற்றும் செலவினம்**




(*ஆதாரம்*: VLC *தரவுகளிலிருந்து தொகுக்கப்பட்டது*)

## 3.6 எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணங்கள்

மாநிலத்தின் எதிர்பாரா செலவு நிதி, இந்திய அரசியலமைப்பு சட்டம், பிரிவுகள் 267(2) மற்றும் 283(2)ல் வகை செய்யப்பட்டுள்ளதற்கு ஏற்ப, தமிழ்நாடு எதிர்பாரா செலவு நிதி திட்டம், 1954ன் கீழ் அமைக்கப்பட்டது. மாநில சட்டமன்ற ஒப்புதல் பெறப்படும் வரை ஒத்தி வைப்பது விரும்பத்தக்கதல்ல என கருதப்படும் எதிர்பாராத மற்றும் அவசரத்தன்மை கொண்ட செலவை மேற்கொள்ள மட்டுமே இந்நிதியிலிருந்து முன்பணங்கள் அளிக்கப்படலாம். அலுவல் முன்பணம் எனும் வகையிலான இந்நிதியின் மொத்த தொகை ₹150 கோடி ஆகும்.

எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் (CFA) எடுக்க அளிக்கப்பட்ட ஒப்புதல்கள் மற்றும் உள்ளபடியான பயன்பாடுகள் 2018-19 முதல் 2022-23

வரையிலான காலகட்டத்தில் உள்ள விவரங்கள் **அட்டவணை 3.20**ல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.20: CFA ஒப்புதல்களின் விவரங்கள் (2018-19 முதல் 2022-23)**

| ஆண்டு | CFA ஒப்புதல்கள் | | CFA பயன்பாடு | | பயன்பாட்டின் விழுக்காடு | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | தொகை (₹கோடியில்) | எண்ணிக்கை | தொகை (₹கோடியில்) | எண்ணிக்கை | தொகை (₹கோடியில்) |
| 2018-19 | 35 | 64.15 | 33 | 46.95 | *94* | *73* |
| 2019-20 | 30 | 40.01 | 27 | 33.69 | *90* | *84* |
| 2020-21 | 20 | 55.10 | 16 | 31.61 | *80* | *57* |
| 2021-22 | 04 | 17.15 | 03 | 12.26 | *75* | *71* |
| 2022-23 | 23 | 75.34 | 22 | 70.42 | *96* | *93* |

(ஆதாரம்: அரசு ஆணைகள்)

நடப்பாண்டில் வெளியிடப்பட்ட CF ஆணைகள் மற்றும் ஆண்டு இறுதி நிலையிலான செலவு விவரங்கள் **இணைப்பு 3.16**ல் தரப்பட்டுள்ளன. ஒரு CF பயன்படுத்தப்படவில்லை மற்றும் எட்டு CF ஆணைகள் பகுதியளவு பயன்படுத்தப்பட்டன என்பது **இணைப்பு 3.16**லிருந்து தெரியவருகிறது.

நடப்பாண்டில் ஒப்புதலளிக்கப்பட்ட 23 CF ஆணைகளின் தொகையான ₹75.34 கோடியில், ₹70.42 கோடி செலவழிக்கப்பட்டு ₹4.92 கோடி மீதி இருந்தது.

## 3.7 தேர்ந்தெடுக்கப்பட்ட மானியங்கள் மீதான சீராய்வு

ஒவ்வொரு வருடமும் இரண்டு மானியங்களை விரிவான மதிப்பாய்வு செய்ய வேண்டும் என நிதி சான்றளிக்கும் தணிக்கை கையேட்டில் (Financial Attest Audit Manual) பத்தி 3.20ல் குறிப்பிடப்பட்டுள்ளது. நிதியொதுக்க கணக்குகளில் உள்ள கணிசமான சேமிப்புகள்/ மிகைகள்/ பிற முறைகேடுகள் அடிப்படையில் மானியங்கள் மதிப்பாய்விற்கு தேர்ந்தெடுக்கப்படுகின்றன. கடந்த ஐந்தாண்டுகளில் தொடர்ச்சியான சேமிப்புகளை கருத்தில்கொண்டு, அவற்றில் பெருமளவு சேமிப்பு உள்ள மானியங்கள் மதிப்பாய்விற்கு தேர்ந்தெடுக்கப்படுகின்றன. 2022-23ன் வரவு செலவு திட்டத்தின் தரம் மற்றும் வரவு செலவு திட்ட செயலாக்கம் குறித்த ஆய்வுக்காக சுற்றுலா – கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, கலை மற்றும் அறநிலையங்கள் துறை) (மானிய எண் 29) மற்றும் உயர்கல்வி துறையின் (மானிய எண் 20) கீழுள்ள கல்லூரி இயக்குநரகமும், தொழில்நுட்ப கல்லூரி இயக்குநரகமும் தணிக்கை மாதிரிக்காக எடுத்துக் கொள்ளப்பட்டன.

### 3.7.1 உயர்கல்வி துறை

#### *3.7.1.1 ஒதுக்கீடு மற்றும் செலவு*

2022-23ம் ஆண்டில் மூல/துணை ஒதுக்கீடுகளுடன் ஒப்பிட்டு உள்ளபடியான செலவின சுருக்கம் கீழே உள்ள **அட்டவணை 3.21**ல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 3.21: மானிய எண் 20ன் கீழுள்ள வரவு செலவு திட்ட ஒதுக்கீடும் செலவும்**

(₹ *கோடியில்*)

| செலவின் தன்மை | | மூல ஒதுக்கீடு | துணை ஒதுக்கீடு | மொத்தம் | செலவு | சேமிப்பு (-) / மிகை (+) | சேமிப்பின் விழுக்காடு | ஒப்படைக்கப் பட்ட தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|
| அனுமதிக்கப் பட்டது | I வருவாய் | 5,285.30 | 316.3 | 5,601.60 | 5,284.95 | (-) 316.65 | *5.65* | (-) 309.76 |
| | II மூலதனம் | 383.59 | 3.00 | 386.59 | 214.1 | (-) 172.49 | *44.62* | (-) 172.49 |
| | III கடன்கள் | -- | 0.19 | 0.19 | 0.19 | -- | *0* | 0 |
| ***மொத்தம் அனுமதிக்கப்பட்டது* (A)** | | **5,668.89** | **319.49** | **5,988.38** | **5,499.24** | **(-) 489.14** | ***8.17*** | **(-) 482.25** |
| சாட்டியது | IV வருவாய் | *0.00** | *0* | *0.00** | *0* | *0.00** | *100* | *0.00** |
| | V மூலதனம் | *0.00** | *0* | *0.00** | *0* | *0.00** | *100* | *0.00** |
| ***மொத்தம் சாட்டியது* (B)** | | ***0*** | ***0*** | ***0*** | ***0*** | ***0*** | ***100*** | ***0*** |
| **பெரு மொத்தம் (A+B)** | | **5,668.89** | **319.48** | **5,988.38** | **5,499.24** | **(-) 489.14** | ***8.17*** | **(-) 482.25** |

** வருவாய் மற்றும் மூலதன கணக்கு ஒவ்வொன்றின் கீழ் ₹2,000 அடையாள ஒதுக்கீடு*

(*ஆதாரம்: நிதியொதுக்க கணக்குகள்* 2022-23)

நடப்பாண்டில் சேமிப்பு ₹489.14 கோடியாக இருந்த போதிலும், ₹482.25 கோடி மட்டுமே ஒப்படைப்பு செய்யப்பட்டது. சேமிப்பு 8.17 விழுக்காடாக இருந்தது. 2018-23 காலகட்டத்தில், வரவு செலவு திட்ட மானியத்தில் சராசரியாக 8.6 விழுக்காடு இத்துறை பயன்படுத்தவில்லை என **அட்டவணை 3.22ல்** காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 3.22: கடந்த ஐந்து ஆண்டுகளின் ஒதக்கீடு மற்றும் சேமிப்பு**

(₹ *கோடியில்*)

| ஆண்டு | மொத்த மானியம் | செலவு | சேமிப்பு | சேமிப்பின் விழுக்காடு |
|---|---|---|---|---|
| 2018-19 | 4,758.74 | 4,504.59 | (-) 254.16 | *5.34* |
| 2019-20 | 5,045.42 | 4,880.43 | (-) 164.98 | *3.27* |
| 2020-21 | 5,422.79 | 4,761.44 | (-) 661.36 | *12.20* |
| 2021-22 | 5,443.56 | 4,719.89 | (-) 723.67 | *13.29* |
| 2022-23 | 5,988.38 | 5,499.23 | (-) 489.14 | *8.17* |
| **மொத்தம்** | **26,658.88** | **24,365.58** | **(-) 2,293.30** | ***8.6*** |

(*ஆதாரம்: அந்தந்த ஆண்டிற்கான நிதியொதுக்க கணக்குகள்*)

இந்த மானியத்தின் ஒட்டுமொத்த சேமிப்பு 8.17 விழுக்காடாக இருந்த போதிலும், மூலதன பிரிவின் கீழ் உள்ள சேமிப்பு 44.62 விழுக்காடாக இருந்தது. மூலதன செலவிற்காக மானியம் 20ல் கொடுக்கப்பட்டுள்ள ₹386.59 கோடிக்கெதிராக ₹214.10 கோடி மட்டுமே செலவு செய்யப்பட்டதால் ₹172.49 கோடி சேமிப்பு ஏற்பட்டது. கடந்த மூன்று ஆண்டுகளில் மூலதன தலைப்பின் கீழ் சேமிப்பு 40 விழுக்காட்டிற்கு மேல் இருந்தது என்பது அரசு கல்லூரிகளில் குடிமை பணிகளை மேற்கொள்வதில் இருந்த குறைபாடுகளை சுட்டிக்காட்டியது. **அட்டவணை 3.23ல்** கூறப்பட்டுள்ளவாறு, 2018-23 காலகட்டத்தில் மூலதன பிரிவின் கீழ் பயன்படுத்தப்படாமல் இருந்த ஒதுக்கீடு ₹566.21 கோடியாகும்.

**அட்டவணை 3.23: மூலதன பிரிவின் கீழ் ஒதுக்கீடு மற்றும் சேமிப்பு**

**(₹ கோடியில்)**

| ஆண்டு | மொத்த மானியம் | செலவு | சேமிப்பு | ஒப்படைக்கப் பட்ட தொகை | சேமிப்பின் விழுக்காடு |
|---|---|---|---|---|---|
| 2018-19 | 378.24 | 339.61 | (-) 38.63 | (-) 45.51 | 10.21 |
| 2019-20 | 245.17 | 198.21 | (-) 46.95 | (-) 47.15 | 19.15 |
| 2020-21 | 270.39 | 138.22 | (-) 132.17 | (-)131.98 | 48.88 |
| 2021-22 | 348.62 | 179.54 | (-) 169.08 | (-)169.08 | 48.50 |
| 2022-23 | 386.59 | 214.10 | (-) 172.49 | (-)172.49 | 44.62 |

(*ஆதாரம்: அந்தந்த ஆண்டிற்கான நிதியொதுக்க கணக்குகள்*)

வரவு செலவு திட்டத்தின் தொடர் சேமிப்புகள் மற்றும் முக்கியமாக மூலதன பிரிவின் கீழுள்ள சேமிப்புகள், அறிதான வரவு செலவு திட்டத்தையும் அதன் செயலாக்கத்தையும் சுட்டிக்காட்டுகிறது.

வரவு செலவு திட்ட மேலாண்மையின் அறிதான செயலாக்கத்தை ஆய்வு செய்ததில் பின்வருவன தெரிய வந்தன*:*

- 2022-23ல் அண்ணா பல்கலைக்கழகத்திற்காக ஒதுக்கப்பட்ட ₹50 கோடி கூடுதல் மானியம், உள்ளூர் நிதி தணிக்கையிடமிருந்து ஈடு செய்தற்கான சான்றிதழ் தரப்படாததால், விடுவிக்கப்படவில்லை.
- டிப்ளமோ மாணவர்களுக்கான வெளிநாடு தொழில்நுட்ப பயிற்சி திட்டம் நடத்தப்படாததால் அதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ₹1.50 கோடி பயன்படுத்தப்படவில்லை. இது குறித்து, தொழில்நுட்ப இயக்குநர் பதிலளிக்கையில் (செப்டம்பர் 2023), நடப்பாண்டில் வெளிநாடு மாணவர்களுக்கு விசா வழங்குவதை தடை செய்திருப்பதால், 2022-23ல் பயிற்சி திட்டம் நடத்தப்படவில்லை என தெரிவித்தார். இப்பதில் உண்மையில் சரியில்லை. ஏனெனில் வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் தரவுகளின்படி, உயர்படிப்புக்காக வெளிநாடுகளுக்கு சென்ற மாணவர்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022-23ல் 68.79 விழுக்காடு அதிகரித்துள்ளது.
- நடைமுறை சிக்கல்கள் காரணமாக பெண்களுக்கான அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் உயர்கல்வி நிறுவனத்திற்கான தொகுப்பு மானியம் ₹85.20 இலட்சம் விடுவிக்கப்படவில்லை.
- 2014-23 ஆண்டுகளில் எந்த ஒரு மாணவரிடமிருந்து விண்ணப்பம் பெறப்படாததால், தொழில் நுட்ப இயக்குநரகத்தின் கீழ் கல்வி சலுகைக்காக வழங்கப்பட்ட ₹1 இலட்சம் பயன்படுத்தப்படவில்லை.
- 62 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு ஆய்வுகூட உபகரணங்கள் வாங்குவதற்கு, அரசு ₹5.20 கோடி ஒப்புதலளித்தது (அக்டோபர் 2022). இந்த கொள்முதலுக்காக, உத்தேச ஒதுக்கீடான ₹2,000 மறுநிதியொதுக்கம்–மறுநிதியொதுக்கம்-I மூலம் ₹5.20

கோடியாக உயர்த்தப்பட்டது. ஆனால், விற்பனையாளரை தேர்வு செய்வதில் நேர்ந்த காலதாமதம் காரணமாக கொள்முதல் ஆணைகள் வழங்குவதில் நிகழ்ந்த காலதாமதத்தால் இந்த இறுதி திருத்திய மானியமான ₹5.20 கோடி முழுவதும் மறுநிதியொதுக்கம்–II மூலம் திரும்ப பெறப்பட்டது. 2017-18 முதல் 2021-22 வரையிலான காலகட்டத்தில் கொள்முதலுக்காக வழங்கப்பட்ட நிதியும் ஒப்படைக்கப்பட்டது என்பது இங்கு குறிப்பிடுவதில் பொருத்தமானதாக இருக்கும். இவ்வாறாக, 62 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் ஆய்வுகூட உபகரணங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி தொடர்ந்து ஒப்படைக்கப்படுவது என்பது துறையின் திறமையின்மையை காட்டுகிறது மற்றும் இந்த 62 கல்லூரிகள் புதிய ஆய்வுகூட உபகரணங்கள் இல்லாமல் இயங்குகின்றன. இதை சுட்டிக்காட்டிய போது, 2017-18 முதல் 2022-23 வரை நிதியை பயன்படுத்தவில்லை என்று அத்துறை ஒப்புகொண்டது மற்றும் விற்பனையாளருக்கு செலுத்துவதற்காக ₹5.20 கோடியை விடுவிப்பதற்கான கருத்துரு ஜூன் 2023ல் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாக மேலும் பதிலளித்தது.

- கீழ்நிலை பட்டபடிப்பு, டிப்ளமோ மற்றும் ITI பாடதிட்டதில் பதிவு செய்யும் அரசு பள்ளி மாணவிகளுக்கு மாதம் ₹1,000 வழங்கும் மூவலூர் இராமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதி திட்டத்தை செயல்படுத்துவதற்காக, தமிழ்நாடு அரசு ₹698 கோடி ஒதுக்கப்பட்டது. ஆயினும், 2022-23ல் ₹100.11 கோடி (வரவு செலவு திட்டத்தில் 14 விழுக்காடு) பயன்படுத்தப்பட்டது மற்றும் எதிர்நோக்கப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கையை தீர்மானிக்காததால் மறுநிதியொதுக்கத்தில் ₹598 கோடி ஒப்படைக்கப்பட்டது என்பது கண்டறியப்பட்டது. பயனாளிகளை அடையாள காணமுடியாமல், வரவு செலவு திட்ட ஒதுக்கீட்டிற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் உள்ள பெரிய இடைவெளி உள்ளது என்பது திட்டத்தை செயல்படுத்துவதில் உள்ள தாமதத்தை குறிக்கிறது என தணிக்கை கண்டறிந்தது. இதனை தணிக்கை சுட்டிக்காட்டிய போது, தொடக்கத்தில் இந்த திட்டத்திற்கான பயனாளிகளின் எண்ணிக்கை 4.36 இலட்சம் என கணக்கிடப்பட்டது, பின்னர், பள்ளி கல்வி துறையால் அரசு பள்ளியில் மட்டும் படித்த மாணவிகளின் எண்ணிகை அடிப்படையில் 1.99 இலட்சமாக குறைக்கப்பட்டதால் பெரும்பாலான ஒதுக்கீடுகள் ஒப்படைக்கப்பட்டன என சமூக நலத் துறை ஆணையர் பதிலளித்தார் (டிசம்பர் 2023). மேலும், 2023-24ல் சராசரியாக ₹26 கோடி பயன்படுத்தப்படும் எனவும் தெரிவித்தார். ஆனால், 2022-23ல் முறையான கணக்கீடு இல்லாமல் வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டது என்பதுதான் உண்மை.

### *3.7.1.2 உயர்கல்வி துறையின் கீழ் விரைவு செலவினம்*

மானிய எண் 20ன். கீழ் **இணைப்பு 3.15**ல். வரிசை எண் 24 முதல் 28 வரை, கூறப்பட்டுள்ளவாறு, மூன்று நிகழ்வுகளில் விரைவு செலவினம் நிகழ்ந்தது.

- ராஷ்டிரிய உச்சதார் சிக்ஷா அபியான் (Rashtriya Uchhatar Siksha Abhiyan – (RUSA))' திட்டத்திற்கு ₹48.15 கோடி மார்ச் 2023 விடுவிக்கப்பட்டது. மத்திய அரசின் பங்கை விடுவிப்பதற்காக கருத்துருவை சமர்ப்பித்தலில் காலதாமதம் காரணமாக விரைவு செலவு ஏற்பட்டது என மாநில திட்ட இயக்குநர், RUSA தெரிவித்தார்.
- மாநில புதுமை நிதியின் கீழ் 'மாற்று திறனாளிகள் சமூகத்திற்கான பகுதி மற்றும் முழுமையாக தானாக இயங்கக்கூடிய நுண்ணறிவு உள்ள புல உடற்கூடு மற்றும் செயற்கை கை உருவாக்கம்' திட்டத்திற்கான ஒப்பளிப்பில் காலதாமதம் காரணமாக ₹2.25 கோடி. 29 மார்ச் 2023 அன்று அண்ணா பல்கலைக்கழகத்திற்கு விடுவிக்கப்பட்டது.
- 'முதுகலை மாணவர்களுக்கு உதவி'க்காக கொடுக்கப்பட்ட ₹6.63 கோடி, காலதாமதமாக அளிக்கப்பட்ட ஒப்பளிப்பால் தகுதியான நபரை தேர்ந்தெடுப்பதில் காலதாமதம் நேர்ந்ததனால், மார்ச் 2023ல் தான் பயன்படுத்தப்பட்டது.

### 3.7.2 சுற்றுலா– கலை மற்றும் பண்பாடு (சுற்றலா, பண்பாடு மற்றும் அறநிலைய துறை)

### *3.7.2.1 ஒதுக்கீடு மற்றும் செலவு*

2022-23ம் ஆண்டில் மானியம் 29ன் கீழ் மூல/துணை ஒதுக்கீடுகளுடன் ஒப்பிட்டு உள்ளபடியான செலவின சுருக்கம் கீழே உள்ள **அட்டவணை 3.24**ல் தரப்பட்டுள்ளது:

**அட்டவணை 3.24: மானிய எண் 29ன் கீழுள்ள வரவு செலவு திட்ட ஒதுக்கீடும் செலவும்**

(*₹ கோடியில்*)

| | செலவின் தன்மை | மூல ஒதுக்கீடு | துணை ஒதுக்கீடு | மொத்தம் | செலவு | சேமிப்பு (–) / மிகை (+) | சேமிப்பின் விழுக்காடு | ஒப்படைக்கப் பட்ட தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|
| அனுமதிக்கப் பட்டது | I வருவாய் | 149.64 | 25.96 | 175.59 | 165.56 | 10.03 | *5.71* | (-) 9.66 |
| | II மூலதனம் | 95.73 | 49.41 | 145.14 | 84.64 | 60.51 | *41.69* | (-) 60.51 |
| | III கடன் | 0.69 | 0.56 | 1.25 | 1.25 | 0 | *0* | 0 |
| *மொத்தம்* அனுமதிக்கப் பட்டது (A) | | **246.06** | **75.93** | **321.98** | **251.45** | **70.54** | ***21.91*** | **(-) 70.16** |
| சாட்டியது | IV வருவாய் | *0.00** | *0* | *0.00** | *0* | *0.00** | *100* | *0.00** |
| *மொத்தம் – சாட்டியது* (B) | | ***0*** | ***0*** | ***0*** | ***0*** | ***0*** | ***100*** | ***0*** |
| பெரு மொத்தம் (A+B) | | **246.06** | **75.93** | **321.98** | **251.45** | **70.54** | ***21.91*** | **(-) 70.16** |

* ₹7,000 *அடையாள ஒதுக்கீடு*

(*ஆதாரம்: நிதியொதுக்க கணக்குகள்* 2022-23)

நடப்பாண்டில் சேமிப்பு ₹70.54 கோடியாக இருந்த போதிலும், ₹70.16 கோடி மட்டுமே ஒப்படைப்பு செய்யப்பட்டது. ஒட்டுமொத்த சேமிப்பு ஒதுக்கீட்டில் 21.91 விழுக்காடாகும். கடந்த ஐந்து ஆண்டுகளில் மானியத்தின் ஒட்டுமொத்த சேமிப்பு வரவு செலவு ஒதுக்கீட்டுடன் ஒப்பிட்டு **அட்டவணை 3.25**ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 3.25: கடந்த ஐந்து ஆண்டுகளின் ஒதுக்கீடு மற்றும் சேமிப்பு**

(₹ *கோடியில்*)

| ஆண்டு | மொத்த மானியம் | செலவு | சேமிப்பு | சேமிப்பின் விழுக்காடு |
|---|---|---|---|---|
| 2018-19 | 179.36 | 141.50 | (-) 37.85 | *21.11* |
| 2019-20 | 349.54 | 189.65 | (-) 159.89 | *45.74* |
| 2020-21 | 362.66 | 277.98 | (-) 84.68 | *23.35* |
| 2021-22 | 202.43 | 179.87 | (-) 22.57 | *11.15* |
| 2022-23 | 321.98 | 251.45 | (-) 70.54 | *21.91* |
| **மொத்தம்** | **1415.99** | **1040.45** | **(-) 375.53** | ***26.52*** |

(*ஆதாரம்: அந்தந்த ஆண்டிற்கான நிதியொதுக்க கணக்குகள்*)

2018-23 காலகட்டத்தில் வரவு செலவு திட்ட ஒதுக்கீட்டில் 26.52 விழுக்காடு பயன்படுத்தப்படவில்லை. இந்த விழுக்காடு, கடந்த ஐந்தாண்டுகளில் 11.15 விழுக்காடு முதல் 45.74 விழுக்காடு வரை இருந்தது.

### *3.7.2.2 மூலதன தலைப்பின் கீழ் தொடர் சேமிப்புகள்*

2022-23ல், மூலதன தலைப்பின் கீழ் 41.69 விழுக்காடு சேமிப்பு இருந்தது. 2018-23 வரையிலான ஐந்தாண்டுகளில், இந்த மானியத்தில் தொடர் சேமிப்புகள் 16.40 விழுக்காடு முதல் 69.40 விழுக்காடு வரை இருந்தது. **அட்டவணை 3.26**ல் கூறப்பட்டுள்ளவாறு 2018-23 காலகட்டத்தில் ஒதுக்கீட்டில் 44.48 விழுக்காடு பயன்படுத்தப்படவில்லை:

**அட்டவணை 3.26: மூலதன பிரிவின் கீழ் ஆண்டுதோறும் செய்யப்பட்ட ஒதுக்கீடு மற்றும் சேமிப்பு**

(₹ *கோடியில்*)

| ஆண்டு | மொத்த மானியம் | செலவு | சேமிப்பு | சேமிப்பின் விழுக்காடு |
|---|---|---|---|---|
| 2018-19 | 62.55 | 29.21 | (-) 33.33 | *53.29* |
| 2019-20 | 197.84 | 60.55 | (-)137.29 | *69.40* |
| 2020-21 | 206.88 | 150.23 | (-) 56.65 | *27.38* |
| 2021-22 | 54.76 | 45.78 | (-) 8.98 | *16.40* |
| 2022-23 | 145.14 | 84.64 | (-) 60.51 | *41.69* |
| **மொத்தம்** | **667.17** | **370.41** | **(-) 296.76** | ***44.48*** |

(*ஆதாரம்: அந்தந்த ஆண்டிற்கான நிதியொதுக்க கணக்குகள்*)

பெரும்பாலான நிகழ்வுகளில், வரவு செலவு திட்ட ஒதுக்கீட்டை செலவு செய்யாத காரணங்கள் கீழே விவாதிக்கப்பட்டுள்ளது:

- மாண்புமிகு கவர்னர் சட்டமன்ற உரையில், ஆகஸ்டு 2021ல், தமிழக அரசு, தஞ்சாவூரில் உள்ள சார்ஜா மாடி, தரங்கம்பாடியில் உள்ள டேனிஸ் கோட்டை மற்றும் மதுரையிலுள்ள திருமலைநாயக்கர் மகால் ஆகியவற்றை மறுசீரமைக்க மற்றும் புதுப்பிக்க முன்மொழிந்தார். இந்த திட்டங்களை செயல்படுத்துவதற்காக தமிழக

அரசு பிப்ரவரி 2022ல் ₹16.93 கோடிக்கு நிர்வாக ஒப்புதலளித்து வரவு செலவு திட்டம் 2022-23ல் ₹17.13 கோடி (4202.04.800.KH) ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த பணிகள் பொதுப்பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டன. விரிவான மதிப்பீடு மற்றும் ஒப்பந்தம் ஆகியவற்றை தயார் செய்வதில் நிகழ்ந்த அபரிதமான காலதாமதம் காரணமாக ₹16.33 கோடி திருப்பி ஒப்படைக்கப்பட்டது. நிதி இருந்தும், 2021ல் முன்மொழியப்பட்ட பணிகள் மார்ச் 2023ல் கூட குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைய முடியவில்லை.

- ஆதிச்சநல்லூர், கொற்கை மற்றும் சிவகலை பகுதியில் சேகரிக்கப்பட்ட கலைபொருட்களை பார்வையிடுவதற்காக "பொருணை அருங்காட்சியகம்" உருவாக்கப்படும் என செப்டம்பர் 2021ல், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்டது. துறையால், 2022-23ம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில்/திருத்திய மதிப்பீட்டில் (4202.04.106.KE) ₹18 கோடி ஒதுக்கீடு பெறப்பட்டது. மாநில உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி (4202.04.106.KC)ன் கீழ் வேறொரு தொகையான ₹20.52 கோடி அளிக்கப்பட்டது. 2022-23ல் விரிவான திட்ட அறிக்கை தயாரிப்புக்காக மார்ச் 2023ல் ₹10.92 கோடி மட்டுமே பயன்படுத்தப்பட்டது மற்றும் மார்ச் 2023 வரை ஒப்பந்தம் இறுதி செய்யாததால், மீதமுள்ள தொகையான ₹27.59 கோடி திருப்பி ஒப்படைக்கப்பட்டது.

மேற்கூறிய இரண்டு நேர்வுகளிலும், திட்டங்களின் நிலையை அடிப்படையாக கொண்டு உள்ளபடியான தேவையை துறை கணிக்க தவறியதால், வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியானது, ஆண்டின் இறுதியில் திருப்பி ஒப்படைக்கப்பட்டது அல்லது செலவழிக்கப்படாமல் இருந்தது. திட்டங்களின் நிலையை கருத்தில் கொள்ளாமல் தயாரித்த தவறான வரவு செலவு திட்டத்தால் தேவையான துறைக்கு கிடைக்க வேண்டிய நிதி கிடைக்கப் பெறாமல் போனது என தணிக்கை கண்டறிந்தது.

## 3.8 முடிவுரை

### *மகளிருக்கான வரவு செலவு திட்டம்*

**மகளிருக்கான வரவு செலவு திட்ட பிரிவுகள் உருவாக்கப்படாததால், எல்லா துறைகளிலும் எல்லா திட்டங்களுக்கும் முறையான பாலின பகுப்பாய்வு செய்து GBS தயாரிக்கப்படவில்லை.**

*(பத்தி 3.3)*

### *மூல மற்றும் துணை ஒதுக்கீடுகளில் ஒதுக்கீடு இல்லாமல் செய்யப்பட்ட செலவு*

**எட்டு நேர்வுகளில், மூல மற்றும் துணை ஒதுக்கீடு இல்லாமல் மறுநிதியொதுக்கம் மூலம் ₹40.09 இலட்சம் செலவு செய்யப்பட்டது.**

*(பத்தி 3.5.1.1)*

### *தேவையற்ற அல்லது மிகையான துணை மானியம்*

59 நேர்வுகளில் அளிக்கப்பட்ட மூல ஒதுக்கீடு பயன்படுத்தப்படாததால், அவற்றுக்கு அளிக்கப்பட்ட மொத்த துணைநிலை மானியமான ₹441 கோடி தேவையற்றதாக ஆயின.

17 கணக்குத் தலைப்புகளில், மூல மற்றும் துணை ஒதுக்கீடுகளில் ₹160.72 கோடி பயன்பாட்டிற்கு இருந்தபோதிலும், மறுநிதியொதுக்க நிலையில் ₹11.06 கோடி கூடுதலாக ஒதுக்கப்பட்டது. இந்த நேர்வுகளில் நிகழ்ந்த மொத்த செலவான ₹146.69 கோடி ஏற்கனவே உள்ள ஒதுக்கீட்டிற்கு உட்பட்டே இருந்தது என்பதால் கூடுதல் ஒதுக்கீடு தேவையற்றதாக ஆனது.

14 நேர்வுகளில், ஒதுக்கீடு முழுவதும் மறுநிதியொதுக்கம் மூலம் திரும்ப பெறப்பட்ட போதிலும், அந்த திட்டங்களில் ₹141.98 கோடி செலவு செய்யப்பட்டது என்பது ஆராயாது செய்யப்பட்ட மறுநிதியொதுக்கத்தை குறிக்கிறது.

2022-23ம் ஆண்டில் 9 மானியங்கள்/நிதியொதுக்கங்களில் 24 நேர்வுகளில் உள்ள மூல ஒதுக்கீடான ₹12,461.23 கோடி முழுவதும் மறுநிதியொதுக்கம் மூலம் திரும்ப பெறப்பட்டது. ஒதுக்கீடு முழுவதும் திரும்ப பெறப்பட்டது என்பது தவறான வரவு செலவு திட்டத்தை குறிப்பது மட்டுமல்லாமல், நிதி தேவையுள்ள பிற துறைகளுக்கு நிதி கிடைக்காமல் போககூடும்.

*(பத்திகள் 3.5.1.4 மற்றும் 3.5.1.5)*

### *செலவிடப்படாத தொகை, திருப்பி ஒப்படைக்கப்பட்ட நிதியொதுக்கங்கள் மற்றும் தொடர் சேமிப்புகள்*

பல்வேறு மானியங்களில், 34 நேர்வுகளில், ₹100 கோடிக்கு மேலான சேமிப்புகள் ₹33,183.15 கோடி ஏற்பட்டது.

கடைசி நாளில் (31 மார்ச் 2023) ₹13,320.27 கோடி (நிகரம்) திருப்பி ஒப்படைக்கப்பட்டது. இதில், ₹10 கோடிக்கு மேலாக 89 நேர்வுகளில் ₹12,979.70 கோடி ஒப்படைக்கப்பட்டது என்பது போதுமான நிதி கட்டுப்பாடு இல்லாததை குறிக்கிறது.

கடந்த ஐந்தாண்டுகளில், 26 மானியம்/ நிதியொதுக்கங்களில் மொத்த மானியத்தில் ஐந்து விழுக்காட்டிற்கு மேலான தொடர் சேமிப்புகள் இருந்தது. மானிய எண் 16 – நிதி துறையில், மூலதன பிரிவின் கீழ், 91 விழுக்காட்டிற்கு மேலாக தொடர் சேமிப்பு இருந்தது.

*(பத்தி 3.5.1.7)*

*முறைப்படுத்தப்பட வேண்டிய கடந்தகால மிகை செலவு*

**2014-22 ஆண்டுகள் சம்பந்தப்பட்ட மிகை செலவினமான ₹2,854.07 கோடியை முறைப்படுத்தப்பட வேண்டியுள்ளது.**

*(பத்தி 3.5.1.8)*

*வரவு செலவு திட்டத்தில் அறிவிக்கப்பட்ட பெரிய கொள்கை முடிவுகள் மற்றும் அதனை செயல்படுத்துவதை உறுதி செய்வதற்கான உள்ளபடியான நிதி*

**சில அறிவிப்புகளில் வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்படவில்லை மற்றும் மற்ற சில அறிவிப்புகளில் ஒதுக்கீடுகள் முழுமையாகவோ அல்லது பகுதியளவோ பயன்படுத்தப்படவில்லை என்பது வரவு செலவு திட்டம் 2022-23ஐ பகுப்பாய்வு செய்ததிலிருந்து தெரிய வந்தது.**

*(பத்தி 3.5.2.2)*

*விரைவு செலவினம்*

தமிழ்நாடு நிதி விதித் தொகுப்பின் பிரிவு 39ன் படி, நிதியாண்டின் இறுதி மாதத்தில் செலவை விரைவுபடுத்துவது தவிர்க்கப்பட வேண்டும். இதற்கு முரணாக, 101 துணை தலைப்புகளின் கீழ் மூல ஒதுக்கீட்டின்போது ஒதுக்கப்பட்ட ₹3,802.84 கோடி தொகை முழுவதும் மார்ச் 2023ல் செலவிடப்பட்டது. இரண்டு மானியங்களை பொறுத்தவரை (மானிய எண் 8 மற்றும் 51) 50 விழுக்காட்டிற்கும் மேலான செலவினம் மார்ச் மாதத்தில் செய்யப்பட்டுள்ளது.

*(பத்தி 3.5.2.3)*

## 3.9. பரிந்துரைகள்

*(i)* *அனைத்து மகளிர் திட்டங்களை அடையாளம் காணவும், GBSஐ முழுமையான வடிவில் தயாரிக்கவும் மகளிருக்கான வரவு செலவு திட்ட பிரிவு உருவாக்கப்பட வேண்டும்.*

*(ii)* *ஒதுக்கீடு இல்லாமல் செலவு செய்வதை உறுதி செய்யும் பொருட்டு, அரசு முறையான கட்டுப்பாடு முறையை உருவாக்க வேண்டும். தேவையற்ற துணை மானிய ஒதுக்கீடுகளை தவிர்க்க வேண்டும்.*

*(iii)* *எதிர்நோக்கப்பட்ட சேமிப்புகளை கண்டறிந்து குறிப்பிட்ட காலத்திற்குள் திருப்பி ஒப்படைப்பதன் மூலம் நிதிகள் பிற வளர்ச்சி நோக்கங்களுக்கு பயன்படுத்த முடியும் வகையில் வரவு செலவு திட்ட கண்காணிப்பு முறையை முறையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.*

*(iv)* *வரவு செலவு திட்டத்தில் அறிவிக்கப்படும் பெரிய கொள்கைகளுக்கும் / திட்டங்களுக்கும் தேவையான ஒதுக்கீடுகள் செய்வதை அரசு உறுதி செய்ய வேண்டும்.*

*(v)* ***கடைசி நேர ஒப்படைப்பு மற்றும் விரைவு செலவினத்தை தவிர்க்க அரசு பொருத்தமான கட்டுப்பாட்டு முறையை ஏற்படுத்த வேண்டும். செலவினங்களின் முன்னேற்றத்தை தொடர்ந்து கண்காணிப்பதற்கான IFHRMSன் வர்த்தக நுண்ணறிவு தொகுதியை செயல்படுத்த வேண்டும்.***